|| श्रीसीतारामस्वरूपिमातापितृचरणार्पणमस्तु ||

No. 30 MAR 1925

# சித்திர இராமாயணம்.

பவன் ராவ் ஸ்ரீநிவாச ராவ்

எனும் பெயருள்ள

பாலா சாஹப் பண்டித பந்த் பிரதிநிதி, பி. எ.,

அவுந்த் சம்ஸ்தானி,

T. 2966

அவர்களா லியற்றிச்

சித்திரிக்கப்பட்டது.

பம்பாய்:

பிரிடிஷ் இந்தியா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

ககூகசு ஆண்டு.

[காபி ரைட்—ரெஜிஸ்டர்ட்]

[All Rights Reserved]

Printed by B. Miller, Superintendent, British India Press, Mazgaon, Bombay.
Published by the Author, Shrimant Bala Saheb Pandit Pant Pratinidhi,
Chief of Aundh, at Aundh, Satara District.

T.24766
30 MAR 1925
MADRAS

# முகவுரை.

இராமாயணக் கதையைப் பெரும்பான்மை சித்திர ரூபமாகவும், சிறுபான்மை இடையிடையே நிகழும் சம்பவங்களைச் சுருக்கிச் சொல்லும் வசன ரூபமாகவும், இப்புத்தகம் கூறுகின்றது. கதையோ புராதனமானது ; இந்நாடெங்கும் வழங்குவது ; தெய்வீகமாகக் கொண்டாடப்படுவது. வான்மீக முனிவர் ஸம்ஸ்கிருதத்தில் செய்த திவ்ய காவியமே அதற்கு முதனூலாம். வடமொழியிற் பிறர் செய்துள்ள வேறு காவியங்களும் நாடகங்களும் தவிர, மஹாராஷ்டிரம், வங்காளம், தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய பல்வேறு பாஷைகளிலே காவியங்களாகவும் நாடகங்களாகவும் அக்கதை அமைக்கப்பட்டு, ஆதினூலிற் காணப்படாத எண்ணிறந்த பேதங்களுடன் இப்பொழுது இந்நாட்டில் நடைபெறுகின்றது. இவ்வாறு வழங்கும் வழிநூல் கிளைநூல்களிற் சில, ஆதிநூலினும் அதிகம் ப்ரசித்திப்பெற்றுப் பாராட்டப்படுகின்றன. ஆதிநூலிற் காணப்படாத அத்தகைய கதாபேதங்கள் பலவற்றை இப்புத்தகத்திற் காணலாம்.

இவ்வண்ணம் இலக்கியத்தில் மட்டுமோ, சிற்பம், ஓவியம், சங்கீதம் ஆதிய பல கலைகளிலும் இராமாயணக் கதை மேலளாவி விளங்குகின்றது ; உதாரணமாக, நமது ஆலயங்களிலே சுவர்களிலும் மண்டபங்களிலும் கோபுரங்களிலும் காணப்படும் சித்திரச் சிலைகளையும், அருமை பெருமையுடன் பண்டிதராலும் பாமரராலும் பாடகராலும் பாராட்டப்படும் ஸ்ரீ தியாகையர் க்ருதிகளையும் நோக்குக.

இராமாயண விருத்தாந்தங்களை இவ்வாறு விஸ்தரிக்கும் சிலைகளும் சித்திரப்படங்களும், நடையுடை பாவனைகள் சரீர லக்ஷணங்கள் முதலிய அம்சங்களில், தேச ஆசார பேதங்களுக் கிணங்க ஆங்காங்கு மாறுபட்டுக் காணு

வது, பல்வேறு சாதிகளையும் பிராந்தங்களையும் அடக்கிக்கொண்டிருக்கும் இம் மாபெருந்தேயத்தில் இன்றியமையாததே. புராதனமானதும் ஹிந்துக் கள் யாவர்க்கும் பொதுவானதுமான இக்கதை, அவரவர் ஆசார அநுஷ்டானங்களுக்கும் அநுபவத்துக்கும் யுத்தி புத்திக்கும் பொருந்த, வெவ்வேறிடங்களில் வெவ்வேறு முறையாக அமைக்கப்படுவது இயல்பன்றோ? இது நிற்கத் : தக்ஷிண தேசத்தாராகிய நாம், இராமாயண கதா பாத்திரங்களின் தோற்றம் வடிவமைப்பு சரீர லக்ஷணங்கள் ஆடை யாபரணங்கள் முதலியன இன்ன இன்ன விதமாகத்தான் இருந்திருக்கலாமென்று நமக்குள்ளே கொள்ளும் மனோபாவங்கள், தக்ஷிணத்திலே மிக அபிமானிக்கப்பட்டு எங்கும் பரவி வரும் இராஜா ரவிவர்மாவின் இராமாயணப் படங்களைத் தழுவியுள்ளன. இதன் காரணம், மூலப்படங்களின் இயற்கைச் சிறப்பினும், யந்திரத்தின் உதவியால் அவற்றின் பிரதிகள் ஆயிரக் கணக்காக அச்சடித்து நாடெங்கும் சொற்ப விலைக்கு விற்கப்பட்டுப் பரவி வருவதேயாம். ஆதலினால், தக்ஷிண சம்பிரதாயமான படங்களையே உள்ள இப்புத்தகமும், இந்தியாவின் மற்றப் பாகங்களினும் தக்ஷிணத்திலே அதிகம் அபிமானிக்கப்பட்டு, சித்திரங்களைத் திருப்பித் திருப்பிப் பார்க்குந்தோறும் புதிதுபுதிதாக மனதுக்கு மகிழ்வூட்டு மென்பது திண்ணம்.

இராமாயண விஷயமாய்ப் பேசப்புகுங்கால், கதையின் சிலாக்கியத்தினும் கவியின் திறமையினும் உண்டாகும் ஆச்சரியமும் உளமகிழ்ச்சியும் ஒருபுறம் நிற்க ; கதா பாத்திரங்களின் ஒழுக்கம் ; குண தோஷங்கள் ; பூர்வகால சரித்திரம் ; பொது ஜனங்களின் நடையுடை பாவனைகள் ; நாகரீகம் ; இராசாங்க நிலைமை முதலியவற்றைப்பற்றி எத்தனையோ சந்தேகங்களும் வினாக்களும் உதிக்கின்றன. அவற்றில் இரண்டொரு அம்சங்களைக் குறித்து மட்டும் கீழே சிறிது விசாரிப்போம் :

முதற்கண் இராஜ பக்தியையும் தேசாபிமானத்தையும் எடுத்துக்கொள்வோம் : இருவருக்கும் மூத்தோனும் அரசனுமான இராவணனது ஒழுக்கம், இருவராலும் கடிந்து வெறுக்கப்பட்டது ; இருவருமே அவனுக்கு நன்மதி கூறினர் ; அவர் போதனையை இகழ்ந்து தன் மனப்படியே அவன் ஒழுகா

நிற்க, சகோதர வாஞ்சை சாதிப்பற்று இராஜபக்தி தேசாபிமானம் முதலிய வற்றை முற்றும் துறந்து, இராமனைச் சேர்ந்துக் கொண்டான் விபீஷணன்; கும்பகர்ணனோ, அவற்றையே பெரிதாக மதித்து,

"நீர்க்கோல வாழ்வை நச்சி, நெடிதுநாள் வளர்த்துப் பின்னர்
போர்க்கோலஞ் செய்துவிட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்,"

என்று கூறி, அமர்க்களத்தில் தன் உயிரையே கொடுத்துச் செஞ்சோற்றுக் கடனைத் தீர்த்தான். ஆரிய கவிஞர் அனைவரும் விபீஷணனைப் பக்த சிரோமணி யாகக் கொண்டாடுவது இயல்பே; ஆயின், இராக்கதர் கவிஞன் ஒருவன் அதே கதையைப் பாடியிருப்பின், விபீஷணன் அவ்வாறு புகழப்படமாட்டா னென்பது திண்ணம். சத்தியத்தையும் நியாயத்தையுமே பெரிது மதிப்பதா கக் கருதித் தம் இனத்தாரையும் அரசனையும் ஆபத்துக் காலத்தில் கைவிட்டு விடுதல், யாவர்க்குமே உசிதமாகத் தோன்றாது. அதுவுமன்றி, சன்மார்க்க மாக நினைக்கப்படும் அவ்வழியில் க்ஷேமலாபங்களும் ராஜபதவியும் கிடைப்ப தாயும், மற்ற வழியில் இகழ்ச்சியும் மரணமுமே கிடைப்பதாயு மிருப்பின், எது கடமையென்று தீர்மானிப்பது எளிதன்று. பாரதத்திலே, தம் நெஞ்சு பொய்க்க அதர்ம கக்ஷியிலேயே நின்று உயிர் துறந்த பீஷ்மர் துரோணராதி மஹான்களை இகழ் வாரிலரே. "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு," என்பதுபோல, 'சரியோ; தப்போ: தாய் நாடே தஞ்சம்,' என்னும் கொள் கையே தேசாபிமானமாக மதிக்கப்படுகின்றது.

'பைபிளும் பாதிரியும் முன்னே, கத்தியும் துப்பாக்கியும் பின்னே,' என்று, மேனாட்டார் பிறதேசங்களை மேலாளவிக் கைக்கொள்ளும் முறைமை யைப்பற்றி, ஓர் மூதுரையுண்டு. இராமாயணத்திற் கூறப்படும் விசுவாமித்தி ரர் அகஸ்தியராதி ஆரிய ருஷிகளையும் இக்காலத்துக் கிறிஸ்தவ பாதிரிகள் போலவே கொள்ளலாம். ஆரிய பூமியின் எல்லையினும், வரம்பு கடந்து அநாரியருக்குரிய ஆரணியங்களிலும் தவம்புரியச் சென்ற ஆரிய முனிவர் களைக் காப்பாற்றுவதாக ராம லக்ஷ்மணர் செய்துகொண்ட சங்கல்பமே ராம ராவண யுத்தத்தின் மெய்க்காரணம். தேசம் எதாயினும், சாதி எதா யினும், பூர்வகால சரித்திரங்கள் ஒவ்வொன்றினும் இதுபோன்ற யுத்தங்கள்

கூறப்படுகின்றன. ஒவ்வொரு புராதன சரித்திரத்திலும் எழுதுவோர் கக்ஷியே தர்மிஷ்டர்களாகவும் எதிர்க்கக்ஷி தர்ம விரோதிகளாகவும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதும் விந்தையன்று.

இலக்கிய விஷயமாயேனும் சரித்திர சம்பந்தமாயேனும் ஆழ்ந்து ஆராயப்புகாத சாதாரண ஜனங்கள், இராமாயணத்தை இவ்வளவு அபிமானித்துக் கொண்டாடுவதின் முக்கிய காரணம், அக்கதை, அவர்களது நாடோடி அநுபவத்துக்கும், ஆசாபாசங்களின் சேஷ்டைகளுக்கும், உலக வாழ்க்கையில் நேரும் சுகதுக்கங்களுக்கும் பொருந்தி அவர்களுக்கு ருசி கொடுப்பதே: சக்களத்திகளுக்குள் உள்ள அசூயையும் ; வ்யோதிக புருஷன் வாலிப மனைவியின் வலையில் சிக்கி, மதிமருண்டு, அவள் ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடும் ஆட்டமும் ; சகோதர வாஞ்சையும், விசுவாசமும் ; தீவழிக் காமமும், அதனால் விளையும் கேடுகளும் ; அவதார புருஷனாகக் கூறப்படும் ராமனுங் கூட, மனுஷ சுபாவத்துக்கு முற்றும் பொருந்தக், கற்பரசியாகிய தன் அருமை மனைவியின்மேற் கொள்ளும் சந்தேகமும், தன் மனம் ஒப்புதலினும் பொது ஜன மதிப்பையே பெரிதாகக் கருதி ஒழுகும் ஒழுக்கமும் ; சீதைக்கு நேர்ந்த கஷ்ட நிஷ்டூரங்களும், இன்னும் இவைபோன்ற அநுபவ சித்தாந்தமான சம்பவங்களுமே, பொது ஜனங்களின் மனதைக் கவர்ந்து, அவர்களது பக்தி விசுவாசத்தைக் கொள்ளை கொள்கின்றன. ஏறத் தாழ யாருமே அறிந்ததாயினும், என்றைக்கும் யார்க்கும் ருசி குன்றாது களிப்பூட்டிக் கொண்டிருக்கும் இராமாயணக் கதையைச் சித்திரப்படங்களால் விஸ்தரிக்கும் இப்புத்தகம், நம்மவருக்குப் புதிதானதோர் உள மகிழ்ச்சியை உண்டுபண்ணுமென்று நம்புகிறேன்.

V. S. SRINIVASAN.

5

ச. 2966

# பால காண்டம் I.

# பால காண்டம் I.

## அட்டவணை.


| பக்கம். | | படம். |
|---|---|---|
| 3 | இராமாயண உற்பத்தி | 1 |
| 4 | இருஷிசிரிங்க மகரிஷி அயோத்திக்கு வருகுதல் | 2 |
| 5 | தேவ பிரசாதம் கிடைத்த விதம் | 3 |
| 6 | விசுவாமித்திர முனிவரின் வரவு | 4 |
| 7 | தாடகை வதம் | 5 |
| 8 | இராஜ குமாரர்கள் அரக்கர்களை ஜெயித்தல் | 6 |
| 9 | கௌதமர் அகல்லியைக்குக் கொடுத்த சாபம் | 7 |
| 10 | அகல்லியையின் சாப விமோசனம் | 8 |
| 11 | ஸ்ரீராமன் சிவதனுசை ஒடித்தல் | 9 |
| 12 | பரசுராமர் கெர்வ பங்கம் | 10 |



# இராமாயண உற்பத்தி.

ஒரு நாள் வால்மீகி மகரிஷி தமஸா நதிக்கு ஸ்நானம் செய்யப்போயினர். அப்பொழுது நதிக்கரையில் ஆணும் பெண்ணும் விளையாடிக்கொண்டிருந்த கிரவுஞ்சப்பக்ஷிகளி லொன்றை, ஒரு வேடன் எய்ததை அவர் பார்த்தார். உடன் அம்பால் தைக்கப் பட்ட அந்த எளிய பக்ஷி முனிவரின் பாதத்தில் இறந்துவிழ, முனிவர் அவனுடைய குரூரமான செய்கைக்குக் கோபித்து அவனைப்பார்த்து, "நீயும் துன்பப்பட்டு இறக்கக்கடவாய்" என்று சபித்தார். அந்த இருஷி தன்னை யறியாமல் சபித்த வார்த்தைகள் 'அனுஷ்டுப்' என்ற சுலோகத்தில் சொல்லும்படியாக நேர்ந்தது. ஏனென்றால் அந்நாள்வரையில் இந்தியாவில் பாடல்கள் எவருக்குந் தெரியாமல் இருந்தது.

பிறகு முனிவர் தமது நித்திய கடன்களை முடித்துக்கொண்டு ஆச்சிரமம் வந்தவுடன், பரமனுனவர் திடீரென்று அவர் முன்பாக பிரஸன்னமாகி இராம கதையை அந்த 'அனுஷ்டுப்' சுலோகத்தில் எழுதும்படி உத்திரவு செய்தார். முனிவர் அந்த உத்திரவை சிரசின்மேல் தாங்கினவராய் இராமாயண சரிதையை எழுதலுற்றார்.



# இருஷிசிரிங்க மகரிஷி அயோத்திக்கு வருகுதல்.


அயோத்தியை ஆண்டுவந்த தசரத சக்கிரவர்த்திக்குப் புத்திர பாக்கியமில்லாமலிருக்கவே, தனக்குப் புத்திரசந்தான முண்டாகும் பொருட்டு யாது செய்யலாமென்று தம்முடைய குருவாகிய வசிஷ்ட மகரிஷியினிடத்தில் ஆலோசித்தார். வசிஷ்ட மகரிஷி இருஷி சிரிங்க முனிவரை வரவழைத்துப் புத்திருண்டாகும்படி புத்திர காமேஷ்டி யாகத்தினை செய்து முடிக்கும்படி தம் கருத்தை வெளி யிட்டார். அப்பொழுது தசரதர் இருஷிசிரிங்க முனிவரிடத்திற்கு சில தூதர்களை அனுப்ப, அவர்கள் அரசன் கட்டளைப்படி, பல தந்திரங்களினால் அவ்விருஷியை அயோத்தியைக்கு அழைத்துச் சென்றனர். தசரதரும் தமது புத்திரியாகிய சாந்தையை அவருக்கு மணஞ்செய்வித்து யாகத்திற்கு வேண்டிய ஆயத்தஞ் செய்தார்.


Balasaheb
1911

## தேவ பிரஸாதம் கிடைத்த விதம்.

---

வஸிஷ்ட மகரிஷியின் உத்திரவின்படி இருஷிசிரிங்க மகரிஷியை யாகத் தலைவராக்கி தசரத மகாராஜனின் புத்திர காமேஷ்டி யாகத்தினை நடத்தத் தொடங்கினர். யாகத்தின் முடிவு தினத்தில் ஒரு நீலவர்ணமான தேவன் யாகாக்கினி குண்டத்தினின்று வெளிக்கிளம்பி தசரதருடைய கையில் தெய்வப் பிரஸாதமாகிய பாயஸத்தைக் கொடுத்து மறைந்து போயினர். தசரதரும் அந்தப் பாயஸத்தை தமது மூன்று மகிஷிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். அப்பிரஸாதம் உட்கொள்ளவே கடவுள் கடாக்ஷத்தினால் அம்மூன்று இராஜ பத்தினிகளும் கருப்பந்தரித்து, கௌஸல்யை இராமனையும், கைகேயி பரதனையும், சுமத்திரை லெக்ஷ்மணனையும் சத்துருக்கனனையும் உசிதமான காலத்தில் பிரஸவித்தார்கள். குல குருவாகிய வஸிஷ்டர் இந்நான்கு இராஜ குமாரர்களுக்கு சகல வித்தைகளையு முபதேசித் தருளினார்.



# விசுவாமித்திர முனிவரின் வரவு.

அக்காலத்தில் வில் வித்தையில் கைதேர்ந்தவரான விசுவா மித்திர மகரிஷி என்னு மோர் இருஷி இருந்தார். அவர் யாகஞ் செய்யுங் காலத்தில் மாரீசனென்றுஞ் சுபாகு வென்று மிரண்டு இராக்ஷஸர்கள் அவர் யாகத்தினை நடத்தவொட்டாம லனேக மிடையூறுகள் செய்யவே அவ்விருஷி அவர்கள் செய்யுந் தொந்த ரவுகளை நிவர்த்திசெய்தற்பொருட்டு தசரதமகாராஜனிடஞ்சென்று அவரது மூத்த குமாரனுகிய இளம்பிராயமுள்ள இராமனைத் தன் னுடன் அனுப்பும்படி கேட்க, அச்சிறுவனை அனுப்ப அரசன் முதலில் மனமில்லாமலிருந்தும், பிறகு அனுப்பச் சம்மதங் கொண்டார். லக்ஷமணனும் இராமனுடன் பின் தொடர்ந்தான். விசுவாமித்திரர் அவ்விரு விராஜ குமாரர்களுக்குஞ் சகல ஆயுதப் பயிற்சிகளுங் கற்றுக்கொடுத்தது மன்றி அவர்களை அதி வீரர்க ளாக்கினுர்.



# தாடகை வதம்.

விசுவாமித்திரருடைய ஆச்சிரமம் போய்ச்சேர, தாடகை என்கிற இராக்ஷஸி வஸிக்குங் காட்டின் வழியே போகவேண்டி யிருந்தது. அந்த இராக்ஷஸியோ இருஷிகளை யெல்லாம் தொந்திரவுகளுக் காளாக்கி வந்தாள். விசுவாமித்திரர் அவளைக் கொல்லும்படி இராமனுக்கு உத்திரவு செய்ய, இராமனுக்கு முதலில் ஒரு பெண்ணைக் கொல்ல மனம் வராமல் இருந்து, பிறகு தன் குருவின் உத்திரவை மீளாதிருத்தற் பொருட்டும் க்ஷத்திரிய தர்மத்தைக் காத்தற் பொருட்டுந் தாடகையின் உயிரை மாய்த்தார்.



# இராஜ குமாரர்கள் அரக்கர்களை ஜெயித்தல்.

விசுவாமித்திரர் அவ்விரு சிறுவர்களுடன் தமது ஆச்சிரமத்தினை யடைந்து, முன்போல் மறுபடியும் தமது யாகத்தை செய்வதற்கு எத்தனஞ் செய்தார். அவர் யாகஞ்செய ஆரம்பித்த காலத்திலேயே, பல சைனியங்களுடன் மாரீச னென்னும் சுபாகுவென்னுமிரண்டு இராக்ஷஸர்கள் அந்த யாகம் நடக்க வொட்டாத விடையூறுகள் செய்தார்கள். அப்பொழுது இராமன் சுபாகுவைக் கொன்று, மாரீசனையு மொரு பாணத்தால் அடித்து அவனை வெகு தூரம் கொண்டுபோய் சமுத்திரத்தில் அமிழ்த்திவிடும்படி செய்தார். மற்ற இராக்ஷஸக் கூட்டங்களும் அதைப்பார்த்து பயந்து ஓடிவிட்டார்கள். அப்பொழுது அவ்விடத்திலிருந்த முனிவர்கள் அனைவரும் சத்துருக்களினின்று தங்களைக்காத்த இராமனையும் இலக்ஷ்மணனையும் புகழ்ந்து ஆசிர்வதித்தார்கள்.


Balasaheb
1911

# கௌதமர் அகலியைக்குக் கொடுத்த சாபம்.


---

பிறகு விசுவாமித்திர முனிவர் மற்ற முனிவர்களோடு ஜெனக மகாராஜன் செய்துவருகிற யாகத்தினைப் பார்த்து வருகிறதற்காக தன் ஆச்சிரமத்தை விட்டுப் புறப்பட்டு வந்தார். அப்பொழுது இராம லெக்ஷ்மணர்களும் ஜெனக மகாராஜரது வசத்திலிருந்த சிவபெருமானது வில்லைப் பார்த்துவர ஆவல்கொண்டு அவர்களுடன் புறப்பட்டனர். வழியில் கௌதம மகாமுனிவரின் ஆச்சிரமத்தின் சமீபமாய்ப் போகவேண்டி யிருந்தது. அப்பொழுது விசுவாமித்திரர் கௌதம முனிவரின் சரிதத்தைச் சொன்னார். "இந்திரன் தன துருவங்கொண்டு தனது பத்தினியாகிய அகலியை அவ்விந்திரனால் கெடுக்கப்பட்டாள்" என்றுணர்ந்து கௌதம முனிவர் "இராமர் வந்து இரக்ஷிக்கும் வரையில் நீ அசையாப் பொருளாக இவ்விடத்திலேயே இருக்கக் கடவாய்" என்று சபித்தார், என்று இவ்விதம் கௌதம முனிவரின் சரிதத்தைச் சொல்லிவிட்டு விசுவாமித்திர முனிவர் அகலியையைச் சாபத்திலிருந்து நீக்கும்படி ஸ்ரீராமனை வேண்டிக்கொண்டார்.


BalaSaheb
1914

# அகல்லியையின் சாப விமோசனம்.

அவ்விதம் ஸ்ரீராமன் அகல்லியை இருக்குமிடம் சென்றவுடன் அகல்லியை ஜீவனுடன் எழுந்து வந்து ஸ்ரீராமனை வணங்கி நமஸ்கரித்தாள். அப்பொழுது இராமனும் இலக்ஷ்மணனும் அவளுடைய ரூபலாவண்ணியத்தை மெச்சி ஆச்சரிய மடைந்தார்கள். பிறகு இராம லக்ஷ்மணர்கள் விசுவாமித்திர முனிவருடன் ஜெனக மகாராஜரது இராஜதானியாகிய மிதுலைமா நகரம் சென்று அவ்வரசனைக் கண்டார்கள்.


Balasaheb
1911

# ஸ்ரீராமன் சிவதனுசை ஒடித்தல்.

ஸ்ரீராமன் சிவபெருமான் வில்லைப் பார்க்க விரும்புகிறனென்று விசுவாமித்திர முனிவர் ஜெனக ராஜனிடஞ் சொன்னர். அப்பொழுது ஜெனகர் மிகு கனதியுள்ள வில்லை அவ்வில் வைத்திருக்கும் பெட்டியோடு கொண்டுவரும்படி செய்து, "இந்த வில்லை எவன் கையிலெடுத்து வளைத்து நாணேற்றுகிறனே, அவனுக்கு எனது புத்திரியாகிய ஸீதையை நான் மணஞ்செய்து கொடுப்பதாக பிரதிக்கனை செய்திருக்கிறேன். இராமனுல் முடிந்தால் அது அவனுடைய அதிர்ஷ்டம்" என்று சொன்னர். அப்பொழுது ஸ்ரீராமன் விசுவாமித்திர முனிவருடைய அனுமதியின்பேரில் அதி வீரர்களான அனேக இராஜர்களுடைய மத்தியில் தனது கையினுல் அத்தனுசை எடுத்து வளைத்து அதில் நாண்பூட்ட இழுக்கையில் அவ்வில் படாரென இரண்டு துண்டாய் முறிந்துவிட்டது. பிறகு ஜெனக மகாராஜன் அயோத்தியமா நகரத்திற்கு ஒரு தூதனை அனுப்பி சகல பந்து ஜெனங்களுடன் தசரத மகாராஜனைத் தனது பட்டணத்திற்கு வரவழைத்து அவரது நான்கு குமாரர்களுக்கும் தன்னுடையவும் தன் சகோதரனுடையவும் ஆன நான்கு கன்னிகைகளை விவாகம் செய்து கொடுத்தார்.


Bala Saheb
1912

# பரசுராமர் கெர்வ பங்கம்.

விவாக மானவுடன் இராம லெக்ஷ்மணர் முதலானவர்கள் தங்களுடைய பந்துக்களுடன் அயோத்தியமா நகரை நோக்கிப் புறப்பட்டார்கள். அப்பொழுது வழியில், அநேகம் க்ஷத்திரியர்களை ஸம்கரித்தவரும் ஜெமதக்கினி முனிவரின் குமாரனுமான பரசுராமரை அவர்கள் கண்டார்கள். பரசுராமர் தனது குருவாகிய சிவபெருமான் வில்லை ஒடித்ததற்காக இராமனிடம் கோபங்கொண்டு தன் கையிலுள்ள விஷ்ணுவின் வில்லை ஸ்ரீராமரிடம் கொடுத்து "இதை வளைத்து நாணேற்றாத பக்ஷத்தில் உனக்குத் தகுந்த சிட்சை செய்வேன்" என்று சபதங் கூறினர். அப்பொழுது தசரத மகாராஜன் மிகுந்த வணக்கத்துடன் தன் புத்திரனை மன்னிக்கவேண்டுமென்று வேண்டினர். வசிஷ்டர் முதலான முனிவர்களும் கோபங்கொள்ள லாகாதென்று பரசுராமரைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனல் ஸ்ரீராமர் விஷ்ணுவின் வில்லில் நாண் ஏற்றி அம்பு பூட்டி எய்வதற்குத் தயாராக இருந்தார். அப்பொழுது அந்த ஸ்ரீராம சந்திரனுடைய வல்லமையைப் பார்த்ததும் பரசுராமருடைய கர்வம் அடங்கியது. பிறகு பரசுராமரும் தம திருப்பிடம் போய்ச் சேர்ந்தார். தசரத மகாராஜனும் தனது பரிவாரங்களுடன் அயோத்திமா நகரத்தை வந்தடைந்தனர்.

# அயோத்தியா காண்டம் II.

# அயோத்தியா காண்டம் II.

## அட்டவணை.


| பக்கம். | | படம். |
|---|---|---|
| 15 | கைகேயியும் மந்தரையும் .. .. .. .. .. | 11 |
| 16 | கைகேயியும் தசரதரும் .. .. .. .. .. | 12 |
| 17 | கைகேயியும் ஸ்ரீராமனும் .. .. .. .. .. | 13 |
| 18 | கௌஸல்யையும் லக்ஷ்மணனையும் சமாதானம் செய்தல் .. | 14 |
| 19 | ஸீதையின் மனதை சாந்தப்படுத்தல் .. .. .. | 15 |
| 20 | வல்கலம் தரித்தல் .. .. .. .. .. .. | 16 |
| 21 | காட்டிற்குப் போகுதல் .. .. .. .. .. | 17 |
| 22 | பரிசல் ஏறுவது .. .. .. .. .. .. | 18 |
| 23 | பாதுகை கொடுத்தல் .. .. .. .. .. | 19 |


Balasaheb
1914

# கைகேயியும் மந்தரையும்.

இவர்கள் எல்லோரும் அயோத்தியை அடைந்த பிறகு பரதன் தனது தம்பி சத்துருக்கனனுடன் அம்மானால் அழைக்கப்பட்டு அவருடைய தேசத்திற்குச் சென்றான்.

தசரத மகாராஜன் ஸ்ரீராமனுடைய குணங்களை யறிந்து அவனை யுவராஜனாகச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இந்த அபிஷேக மஹோத்ஸவத்தைக் கொண்டாடுவதற்காக பட்டணம் முழுதும் அலங்கரிக்கப்பட்டது.


ஆனால் இப்படி அலங்காரஞ் செய்துவருஞ் சமயத்தில் கைகேயினுடைய சேடியான மந்தரை என்பவள் பொறாமையுடன் கைகேயினிடஞ் சென்று, “ஏன் நீ சும்மாய் இருக்கிறாய். ஸ்ரீராமன் யுவராஜனாகும்பட்சத்தில், நீ பாக்கியமற்ற வளாவாய். ஆகையால் உன் புத்திரனுடைய க்ஷேமத்தை நீ உத்தேசித்து அதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டும்,” என்று சொன்னாள். தனது புத்திரனான பரதனைக் காட்டிலும் ஸ்ரீராமனிடத்தில் வாத்ஸல்யமுள்ளவளாதலால் கைகேயி ஸ்ரீராமனுக்கு இளவரசுப் பட்டாபிஷேகஞ் செய்யப்போகிற தென்றதைக் கேட்டவுடன் மிகவு மானந்தங் கொண்டாள். இந்த நல்ல சமாச்சாரத்தைக் கேட்டதா லுண்டான சந்தோஷத்தால் தனது கழுத்தினில் அணிந்திருந்த முத்து மாலையைச் சன்மானமாக மந்தரைக்குக் கொடுத்தாள். அப்பொழுது துஷ்டையாயும் பாபசீலயுமாயுள்ள மந்தரை அந்த முத்து மாலையை வாங்கிக்கொள்ளாமல் ஸ்ரீராமனைக் காட்டுக்குப் போகும்படி செய்வதற்கும் பரதனுக்கு இளவரசுப் பட்டாபிஷேகஞ் செய்வதற்கும் வேண்டிய பல துற்போதனைகளைக் கைகேயிக்குச் செய்தாள்.


Balasaheb
1912

# கைகேயியும் தசரதரும்.


பிறகு கைகேயி தனது தேகத்திலணிந்திருந்த ஆபரணங்களை எல்லாம் களைந்தெறிந்து விட்டு, மிகவும் அழுக்கானதும், கந்தலுமான ஒரு வஸ்திரத்தை உடுத்திக்கொண்டும், மிகவும் கோபங்கொண்டதுபோல் அபினயம் செய்துக்கொண்டும் தரையில் விழுந்து புறண்டுக்கொண்டிருந்தாள். அவளிடத்தில் மிகவும் காதல் கொண்டிருந்த தசரத மகாராஜன், அவளவ்விதமாயிருக்கும் நிலையைக் கண்டு வெகு பரிதாபத்துடன், "உன் மனதிலுள்ள இஷ்டத்தை என்னிடம் சொல்வையேயாகில் அதை நிறைவேற்றிக் கொடுக்க நான் தயாராயிருக்கிறேன்," என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் கைகேயி தசரதனைப் பார்த்து "முன் காலத்தில் எனக்கு இரண்டு வரத்தை நிறைவேற்றிக் கொடுப்பதாய் நீர் வாக்களித்திருப்பதால் அவ்விரண்டு இஷ்டத்தை இப்பொழுது கொடுக்கிறீரா?" என்று கேட்டாள். அதை ராஜா ஒப்புக்கொண்டவுடன் கைகேயி, "எனது பரதனுக்கு இளவரசுப் பட்டம் கொடுப்பது ஒன்று, ஸ்ரீராமனைப் பதினான்கு வருஷம் வனவாசஞ் செய்யச் சொல்வதொன்று, ஆகிய இரண்டு வரங்கள்" என்று கேட்டுக் கொண்டாள்.

தசரத மகாராஜன் ஒருவராலும் எதிர்ப்பார்க்காத இந்த மனோரதத்தை மனைவியின் வாக்கால் கேட்டவுடன் மிகவும் துக்கப்பட்டு அவளுடைய மனதைத் திருப்புவதற்குப் பலவித சமாதானங்கள் சொல்லியும் அவைகளொன்றும் பயனில்லாதொழிந்தன. ஸ்ரீராமன் காட்டிற்குப் போனால் தான் பிழைத்திருக்க முடியாதென்று சொல்லியும் அவள் மனது மாறவில்லை. கடைசியில் காட்டுக்குப் போவதற்கு முன் ஸ்ரீராமனைப் பார்ப்பதற்காக அவளைக் கேட்டுக்கொண்டார்.



# கைகேயியும் ஸ்ரீராமனும்.

ஸ்ரீராமன் கைகேயின் இஷ்டப்படி அரண்மனைக்கு வந்து, அவ்விடத்தில் துக்கத்துட னிருந்த பிதாவாகிய தசரத மகாராஜனையும், கோபத்துடனிருந்த கைகேயியையும் பார்த்து வியசனமும் ஆச்சரியமும் அடைந்தான். அப்பொழுது ஸ்ரீராமர் "ஏன் மகாராஜா கோபத்துடனிருக்கிறார்? ஏன் அவர் ஒன்றும் பேசவில்லை?" என்று கைகேயினிடத்தில் கேட்டார். "மகாராஜா கோபப்பட்டவரல்ல ஆனால் அவர் எனக்கு வாக்களித்த விஷயத்தை உனக்குச் சொல்ல லஜ்ஜையுள்ளவரா யிருக்கிறார். நீ அவர் கொடுத்த வரத்தை நிறைவேற்றவேண்டும்" என்று மறுமொழி பகன்றாள். "என் பிதாவானவர் என்ன வாக்களித்திருந்த போதிலும், அதன்படி நடக்க நான் தயாரா யிருக்கிறேன். ஆனால் அவர் என்னுடன் ஒரு வார்த்தை பேசும்படி செய்ய உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்றார். ஸ்ரீராமருடைய இந்த வார்த்தையைக் கேட்டவுடனே "இந்த துஷ்டையான பாபி உன்னுடைய இளவரசு பட்டாபிஷேகத்திற்கு விபரீதமாய் உன்னைக் காட்டிற்குப் போகும்படி என்னைத் தந்திரமாய் வஞ்சித்து விட்டாள். ஆகிலும் சிங்காதனத்தில் இருப்பதற்கு உனக்கு நான் அனுமதி கொடுத்திருக்கிறேன்," என்று தசரத மகாராஜன் சொன்னார். அப்பொழுது கைகேயி எனக்கு உன் பிதா வாக்களித்தபடி நீயே பரதனுக்கு இளவரசுப் பட்டாபிஷேகம் செய்யச் சம்மதிக்காத பக்ஷத்தில் உன் பிதாவானவர் நரகத்தை அடைவார்," என்று ஸ்ரீராமனுக்குச் சொன்னாள். அது கேட்டவுடனே இராமர் "இப்பொழுதே நான் தாமஸிக்காமல் வனத்திற்குப் பிரயாணம் செய்கிறேன்," என்று சொல்லிக் கொண்டு போனார்.


BalaSaheb
1912

# கௌஸலையையும் லக்ஷ்மணனையும் சமாதானம் செய்தல்.

---


பிறகு ஸ்ரீராமன் தனது தாயார் கௌஸலையி னிடத்தில் உத்திரவு பெற்றுக்கொள்ளச் சென்றபொழுது அவ்விடத்தில் அவள் கிரகங்களா லுண்டாகும் தோஷ நிவர்த்திக்காக அக்கினியில் ஹோமங்களையும் தேவதா பூஜைகளையும் செய்வித்திருந்தாள். அப்பொழுது ஸ்ரீராமர் தனக்குக் காட்டிற்குச் செல்வதற்கு வாக்களிக்கும்படி கேட்டார். அந்த வார்த்தையைக் கேட்டு மிகவும் வருத்தத்துடன் காட்டிற்குப் போகாமலிருப்பதற்குத் தகுந்த பலவித போதனைகளைச் சொல்லியும் அநாதையான அவளுடைய வார்த்தைகள் ஒன்றும் பயன்படவில்லை. ஸ்ரீராமர் அவளுடைய வியசனத்தை சமாதான வார்த்தைகளால் சாந்தப்படுத்திப் பதினன்கு வருஷஞ் சென்றவுடன் காட்டினின்று கட்டாயம் திரும்பி வருகிறேனெ”ன்று வாக்களித்தார்.

ஸ்ரீராமர் காட்டிற்குப் போகிற சங்கதியைக் கேட்டு, லக்ஷ்மணன் மிகுந்த கோபத்துடன் தனது வாளினல் கைகேயியைக் கொல்வதற்கும் ஸ்ரீராமரையே இளவரசனுக வைப்பதற்கும் அனுமதி கொடுக்கவேண்டு மென்று ஸ்ரீராமரைக் கேட்டான். அப்பொழுது ஸ்ரீராமர் லக்ஷ்மண னுடைய கையைப்பிடித்துக்கொண்டு “அவ்விதமான குரூரமான செய்கைகளை நீ செய்யக்கூடாதெ”ன்று அவனைத் தடுத்து முடிவில் அவனைத் தன்னுடன் காட்டிற்கு வருவதற்கு சம்மதம் கொடுத்து சாந்தப்படுத்தினர்.


Balasaheb
1912

## ஸீதையின் மனதை சாந்தப்படுத்தல்.

பிறகு ஸ்ரீராமர் தனக்கு மிகவும் அன்புள்ள ஸீதை இருக்குமிடத்திற்குச் சென்றார். ஆபரணங்க ளில்லாமலும் ராஜவேஷமில்லாமலும் ஸ்ரீராமர் வந்திருப்பதைப் பார்த்து ஸீதாதேவி மிகவும் ஆச்சரிய மடைந்தாள். அப்பொழுது "மகாராஜா என்னைக் காட்டுக்குப் போக உத்திரவு கொடுத்திருக்கிறபடியால், நீ இவ்விடத்தி லிருந்துக்கொண்டு என் மாதாவுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வருவது எனக்கு நிரம்பவு மிஷ்டமாயிருக்கும்" என்று அவளிடம் ஸ்ரீராமர் சொன்னார். அதைக் கேட்டு ஸீதாதேவி "உமது சகாயமில்லாமல் நா னிவ்விடமிருப்பது உசிதமில்லை. ஆகையால் என்னையும் காட்டுக்கு இட்டுக்கொண்டு போகவேண்டுமென்று மிகவும் வியசனத்துடனும் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்த கண்ணுடனும் வணக்கத்துடனும் கேட்டுக்கொண்டாள்." இவ்வளவு குணவதியும் பிரியமு முள்ளவளுமான ஸீதையை விட்டுக் காட்டிற்குப் போக மனம் வாராமல் அவளையும் தன்னுடன் இட்டுக்கொண்டு போவதாக நிச்சயம் செய்தார்.


BalaSaheb
1912

# வல்கலம் தரித்தல்.

ஸ்ரீராமர் உடனே தனக்குச் சொந்தமான அறைகளிலுள்ள ஸாமான்களை எல்லாம் நன்றாயிருக்கும்படி செய்தார். பிறகு அவர்களுடைய வீடுகளையும் நகைகளையும் இன்னும் வேறு ஸாமான்களையும் பிராமணர்களுக்குத் தானம் கொடுத்தார்கள். பிறகு ஸ்ரீராமர் லக்ஷ்மணன் ஸீதா தேவி, இம்மூவர்களும் தசரத மகாராஜனைக் கண்டு அவருடைய உத்திரவைப் பெற்றுக்கொள்வதற்காகக் கைகேயி இருக்குமிடத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது கைகேயி அவர்களுக்கு மரத்தோல்களை உடுப்பதற்குக் கொடுத்தாள். உடனே ஸ்ரீராமரும் லக்ஷ்மணனும் தங்களுடைய விலை மதிக்க முடியாத பட்டாடைகளைக் களைந்துபோட்டு மர வுரிகளை உடுத்தார்கள். ஆனால் ஸீதாபிராட்டியாருக்கு அந்த மர வுரிகளை உடுக்கத் தெரியாததைப் பார்த்து ஸ்ரீராமர் அவளுக்கு உதவி செய்தார். இதைப் பார்த்து தசரதரும் கௌஸலை முதலான ஸ்திரீகளும் மிகவும் வியசனப்பட்டுக் கண்ணீர் விட்டார்கள். அப்பொழுது வெகுமான்யரும் குல குருவுமாகிய வசிஷ்ட முனிவர் மிகவும் கோபமடைந்து தசரதருடைய உயிரான ஸ்ரீராமனை இவ்விதம் காட்டிற்குப் போகும்படி செய்ததான உன் வஞ்சனை பாயம் அவருடைய ஜீவனை நீக்குவதா யிருப்பதால் உனக்கு க்ஷேமத்தை ஒரு பொழுதும் செய்யமாட்டாது" என்று கைகேயியை நிந்தித்துச் சொன்னார். கடைசியில் தசரதன் முன் உடுத்திருந்த பட்டு வஸ்திரங்களுடனும் ஆபரணங்களுடனும் ஸீதையைக் காட்டிற்குப் போகும்படி சம்மதித்தார். பிறகு இம்மூவர்களையும் ரதத்தி லேற்றிக் கொண்டு வனத்திற்குக் கொண்டுபோய் விடும்படி தனது மந்திரியான சுமந்திரனுக்கு உத்திரவு கொடுத்தார்.



## காட்டிற்குப் போகுதல்.

சுமந்திரன் ரதத்தைக் கொண்டுவந்த வுடன் இவர் மூவர் களும் அதில் ஏறிக்கொண்டு காட்டிற்குப்போகப் புறப்பட்டார்கள். அப்பொழுது நகரவாஸிகள் எல்லோரும் ஸ்ரீராமர் காட்டுக்குப் போவதை யறிந்து அவரிடத்தில் வைத்திருந்த பிரியத்தால் மிக வும் துக்கமடைந்தார்கள். சிலர் தசரத மகாராஜனை தூஷித்தார் கள். இன்னுஞ் சிலர் பரதனை வைதார்கள். ஸ்ரீராமர் ரதத்தில் ஏறிக்கொண்டு புறப்பட்டவுடன் பட்டணத்திலுள்ள புருஷர்களும் ஸ்திரீகளும் அவர்களுடன் காட்டிற்குப் போவதற்கு அந் நகரை விட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் எல்லோரும் கங்காநதிக் கரையில் வந்து சேர்ந்தவுடன் ஸ்ரீராமர் நிரம்பவும் வருத்தத் துடன் அன் நகரவாஸிகளான ஜனங்களைத் திரும்பிப் போகும்படி செய்தார்.


Balasaheb
1914

# பரிசல் ஏறுவது.

நிஷாதர்களுக்கு அரசனான குஹன் என்பவன் இவர்கள் மூவரையும் கங்கா நதியின் மறு கரையை அடையும்படி செய்ய ஒரு பெரிய பரிசலைக் கொண்டு வந்தான். முதலில் லக்ஷ்மணன் ஏறிக் கொண்டு ஸீதாபிராட்டியாரை அதில் ஏறும்படி உதவி செய்தான். அப்பொழுது ஸ்ரீராமர் தனது பிதாவின் தேகரக்ஷை செய்வதற்கு வேண்டிய நற்போதனைகளை மந்திரியாகிய சுமந்திரனுக்குச் செய்தார். பிறகு அவரும் பரிசலில் ஏறிக்கொண்டு நதியின் மறு கரை சென்று மலையடிவாரமான சித்திரகூடம் என்னு மிடத்திற்குப் போய், அவ்விடத்தில் வாஸஞ் செய்வதற்காக சிறு குடிசை ஒன்று செய்துக்கொண்டார்.

இது நிற்க ஸ்ரீராமர் தன்னைவிட்டுப் பிரிந்து போனதா லுண்டான வியசனத்தால் தசரத மகாராஜன் சுவர்க்கபதவியை அடைந்தார். அப்பொழுது வசிஷ்ட மகாமுனி பரதனை அயோத்திக்கு வரவழைத்து அவனுடைய பிதாவின் ஸம்ஸ்காரங்களைச் செய்வித்தார். பிறகு இராஜாவின் உத்திரவுப்படி பரதனுக்கு பட்டாபிஷேகத்திற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால் பரதன் தனது மாதாவாகிய கைகேயியை மிகவும் நிந்தித்தான். "ஸ்ரீராமருக்குப் பாத்தியமாகிய சிங்காதனத்தில் ஏறி உட்கார எனக்கு யோக்கியதை இல்லை யாதலால் நான் ஒரு பொழுதும் அதில் இருக்கமாட்டேன்," என்று சொல்லி பரதன் கால்நடை யாகவே ஸ்ரீராமர் இருக்குமிடத்தைத் தேடிப் புறப்பட்டான். அப்பொழுது பரதனுக்கு ஸ்ரீராமரிடத்திலிருக்கிற சினேகத்தையும் பக்தியையும் கண்டறிந்து சந்தோஷித்து மூன்று மாதர்களும், குலகுருவாகிய வசிஷ்டரும் அநேக நகரவாஸிகளும் பரதனுடன் புறப்பட்டார்கள்.


BalaSaheb
1911

46

# பாதுகை கொடுத்தல்.

---

பரதன், சத்ருக்னன், வசிஷ்டமுனி, மூன்று மகிஷிகளும், இன்னும் அனேக ஜனங்களும் சித்திரகூடம் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் ஸ்ரீராமரைப் பார்த்தார்கள். ஸ்ரீராமர் பிதாவின் மரண ஸங்கதியைக் கேட்டு துக்க ஸாகரத்தில் மூழ்கினர். பரதன் முதலானவர்கள் ஸ்ரீராமரை மறுபடியும் ராஜ்ஜியத்திற்குத் திரும்பி வருவதற்குப் பலவிதமாகச் சொல்லியும் அவர் பதினான்கு வருஷம் காட்டிலிருப்பதாக வாக்களித்ததை நிறைவேற்றத் தீர்மானித்தார். கடைசியில் பரதன் அதிக வியசனப்பட்டு கண்ணீர்களுடன் ஸ்ரீராமருடைய பாதுகைகளை எடுத்துக்கொண்டு அவைகளைச் சிங்காசனத்தில் வைத்து அவர் கீழ்ப்படிந்து தேசத்தையாளுவதற்குச் சம்மதம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். இப்படி வேண்டிக்கொண்டதை ஸ்ரீராமர் ஒப்புக்கொண்டார். மாதா கௌஸலை மிகவும் வருத்தத்துடன் புத்திரனிடத்திலும் ஸீதையிடத்திலும் சொல்லிக்கொண்டு திரும்பினள். சுமத்திரை லக்ஷ்மணனுக்குக் காட்டிலே மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று சொல்லித் திரும்பினள். வசிஷ்ட முனிவரும் இவ்விதம் சகோதரர்களுக்கு இருக்கும் விசேஷமான சினேகத்தைக் கண்டு மிகவும் சந்தோஷமடைந்தார். பிறகு எல்லோரும் அயோத்தியை அடைந்தனர்.

சித்திரக் கூடம் அயோத்திக்குச் சமீபத்திலிருக்கிறபடியால் அடிக்கடி ஜனங்களுடைய தொந்தரவு நேரிடாமலிருக்கவேண்டுமென்று நினைத்து, ஸ்ரீராமர் முதலான மூவர்களும் அவிடம் விட்டுத் தண்டகாரண்ணியத்திற்குப் போனார்கள்.

# ஆரண்ய காண்டம் III.

# ஆரண்ய காண்டம் III.


## அட்டவணை.


| பக்கம். | | படம். |
|---|---|---|
| 26 | விராதனுடைய வதம் .. .. .. .. .. | 20 |
| 27 | சூர்ப்பனகையின் வரவு .. .. .. .. .. | 21 |
| 28 | கரதூஷணர்கள் முதலான ராக்ஷஸர்களுடன் யுத்தஞ்செய்தல் | 22 |
| 29 | மாய மான் .. .. .. .. .. .. .. | 23 |
| 30 | இராவணன் வருகை .. .. .. .. .. .. | 24 |
| 31 | கழுகு ராஜனான ஜடாயு .. .. .. .. .. | 25 |
| 32 | இலக்ஷ்மணன் ஸ்ரீராமருடைய உத்திரவை மீறினது .. .. | 26 |
| 33 | ஸீதையின் ஆபரணங்களைக் கண்டெடுத்தல் .. .. .. | 27 |
| 34 | கபந்தன் என்கிற ராக்ஷஸனுடைய வரலாறு .. .. .. | 28 |
| 35 | சபரீ என்னும் வன தேவதை .. .. .. .. | 29 |


BalaSaheb


## விராதனுடைய வதம்.

தண்டகாரண்யத்தில் உள்ள அனேகம் அரக்கர்களை ராமலக்ஷ்மணர்கள் கொன்றார்கள். ஒரு நாள் விராதன் என்ற துஷ்ட ராக்ஷஸன் ராம லெக்ஷ்மணர்களை எதிர்த்து, அவர்களை எடுத்துக் கொண்டு போக யத்தனித்தான். கடைசியில் அவர்களிருவரும் தங்கள் வாள்களாலே அவன் கரங்களை அறுத்துத் தப்பித்துக் கொண்டார்கள். விராதன் சரீரம் முழுவதும் அதிகமாகக் காயப் பட்டிருந்தபோதிலும், அவன் சாகாம லிருப்பதைக் கண்டு, ஸ்ரீராமர் தனது காலை அவனுடைய மார்மேல் வைத்து அவன் மறுபடியு மெழாதபடி மிதித்துக்கொண்டு நிற்க இலக்ஷ்மணன் அவனைப் புதைக்க ஒரு குழியை வெட்டினன். பிறகு அவனை உயிரோடு அக்குழியில் தள்ளிப் புதைத்தார்கள்.



## சூர்ப்பனகையின் வரவு.

பிறகு அகஸ்திய முனிவருடைய உபதேசப் பிரகாரம் ஸ்ரீராமர் கோதாவரி நதிக்கரையில் ஒரு குடிசை கட்டிக்கொண்டு வாஸஞ் செய்தார். அவருடைய ஆச்சிரமத்தி னருகாமையில், கரன், தூஷணன் என்ற ராக்ஷஸர்களும் இராவண னுடைய ஸகோதரி யாகிய சூர்ப்பனகை என்ற ராக்ஷஸியும் வசித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சூர்ப்பனகை ஸ்ரீராமர்மேல் மிகவும் காதல் கொண்டு அதி சுந்தரியான வடிவு எடுத்து ராகவரிடம் வந்து நாணமின்றி "உன்னிடத்தில் நான் காதலுள்ளவளா யிருக்கிறேன். நீ என்னை அங்கீகரிக்கவேண்டும்" என்றாள். அதைக் கேட்டு ஸீதா தேவி புன் சிரிப்புக்கொள்ளவே சூர்ப்பனகை அதிக கோபா வேசத்துடன் பயங்கரமான தனது வாயைத் திறந்துக்கொண்டு அவள்மேல் பாய்ந்தாள். அதைக் கண்டவுடன் லக்ஷ்மணன் தனது வாளினல் அவளுடைய மூக்கையும், காதுகளையும் அறுத்துவிட்டு அவளைத் துறத்திவிட்டான்.


Balasaheb

# கரதூஷணர்கள் முதலான ராக்ஷஸர்களுடன் யுத்தஞ் செய்தல்.

பிறகு சூர்ப்பனகை கோவென் றலரிக்கொண்டு கரன், தூஷணன், திரிசிரன் என்ற தனது சகோதரர்களிடம் சென்றாள். அவளுடைய அந்தக் கோர நிலையைக் கண்ட மாத்திரத்தில் அவர்கள் ஆயிரக் கணக்கான ராக்ஷஸர்களுடன் ராம லெக்ஷ்மணர்களிருந்த பஞ்சவடியை எதிர்த்தார்கள். அப்பொழுது ஸ்ரீராமர் ஸீதையுடன் ஒரு மலைக் குகையில் ஒளித்துக்கொள்ளும்படி லெக்ஷ்மண னுக்குச் சொல்லிவிட்டுத் தான் கவசம் முதலானதுகளைத் தரித்துக்கொண்டு வில்லைக் கையிலேந்தி ராக்ஷஸர்களுடன் யுத்தஞ் செய்தார். உடனே ராக்ஷஸர்கள் அனேகம் ஆயுதங்களுடனும் பாணங்களுடனும் ஸ்ரீராமர் மேல்ப் பாய்ந்தனர். சற்று நேரத்திற்குள்ளாக ஸ்ரீராமர் கரனையுந் தூஷணனையுந் திரிசிரனையு மின்னு மனேக ராக்ஷஸர்களையும் ஸம்காரம் செய்தார். இவ்விதம் யுத்தத்தி லுண்டான நாசத்தையும் தோல்வியையுங் கண்டு சூர்ப்பனகை தனது சகோதரனான ராவணனுடைய இருப்பிடமாகிய லங்காபுரிக்கு ஓடினாள்.



BalaSaheb

56

## மாய மான்.

இராவணன் தனது சகோதரி சூர்ப்பனகை அவமானப்படுத்தப் பட்டதையும், பஞ்சவடியில் நடந்த யுத்த ஸங்கதியையும் அவள் மூலமாய் ஆதியோடந்தமாய் அறியவே கோபாவேசனுனன். அதுவுமல்லாமல் சூர்ப்பனகை ஸீதையின் அழகை வர்ணித்து, அவனுக்கு ஸீதையின்மேல் மோகமுண்டாகும்படி செய்யவே இராவணன் மாரீசனிடம் சென்று ஸீதையைத் திருடிக் கொண்டு வருவதற்கு அவனாலான உதவி செய்யவேண்டுமென்று அவனைக் கேட்டுக்கொண்டான். அப்பொழுது மாரீசன் ஸ்ரீராமருக்குப் பால்ய காலத்திலேயே யிருந்த வல்லமையைப் பலவிதம் புகழ்ந்து ராவணனுக்குச் சீதையினிட மிருக்கிற ஆசையை நீக்குவதற்கு வெகு பிரயாசைப்பட்டும் பலிக்கவில்லை. ஆனதால் அவன் உடனே அவனுக்கு சகாயஞ் செய்வதாக ஒப்புக்கொண்டான். ஆகவே இராவணனுடைய வேண்டுகோள்ப்படி மாரீசன் தங்கம் போல மின்னுகிறதும் வெள்ளிபோல் வெளுத்த பொட்டுக்களுள்ளதுமான ஒரு அழகான மாய மான் வேஷத்தை எடுத்துக்கொண்டு ஸ்ரீராம ரிருக்குமிடத்தைச் சேர்ந்தான்.

மாங் கொத்துகளையும் பூங் கொத்துகளையும் அசோக புஷ்பங்களையும் ஸீதை பறித்துக்கொண்டி ருக்குங் காலத்தில் அந்தப் பொன் மானைக் கண்டு, அதை இச்சித்து, அதைப் பிடித்துக் கொடுக்கும்படி ஸ்ரீராமரை வேண்டிக்கொண்டாள். அதின்மேல் ஸ்ரீராமர் ஸீதையை ஜாக்கிருதையாய் ரக்ஷித்துக்கொண் டிருக்கும்படி லெக்ஷ்மணனிடம் சொல்லிவிட்டு மானைப் பின் தொடர்ந்து போனர்.



# இராவணன் வருகை.


மாரீசன் ஸ்ரீராமருடைய பாணத்தினல் அடிக்கப்பட்டு "ஓ லக்ஷ்மணு! ஓடிவா, ஓடிவா" வென் றலறினன். அதைக் கேட்டு ஸீதை இராமருக்கு விபத்து நேர்ந்ததென் று பயந்து அவருடைய உதவிக்கு லெக்ஷ்மணனைப் போகச் சொன்னுள். ஸ்ரீராமருக்கு யாதொரு தீங்கும் வாராதென்று லெக்ஷ்மணன் யாது சொல்லியும் ஸீதை கேட்டா ளில்லை. ஆனல் ஸீதை "இராமனுடைய ஜீவனுக் குண்டாகிய அபாயத்தைக் கருதி என்னை மனைவியாக்கிக் கொள்ள விரும்புகிருயோ" வென் றவனைத் தன் கோர வார்த்தைகளால் நிந்தித்தாள். இலக்ஷ்மணன் அதைச் சகிக்க மாட்டாமல் கண்ணீர் பெருக்கி இராமரது ஸகாயத்திற்காகப் புறப்பட்டான்.

அத்தருணத்தில் இராவணன் ஒரு சந்நியாசி வேஷந்தரித்து ஸீதை இருக்குமிடஞ் சென்று தனது சக்தியையும் பெருமையையும் மெச்சித் தான் லங்கா நகரத்தின் அரச னென்றும் அவளைத் தனது மகாராணியாக வேண்டு மென்றுஞ் சொல்லித் தன்னுலான மட்டும் அவள் மனதைத் திருப்ப முயன்ருன். பிறகு ஒன்றும் பயன்படாமற் போகவே இராவணன் தன் பயங்கரமான சொந்த உருவத்தைக் காட்டினன். ஸீதாபிராட்டியார் அவனுடைய பயங்கரமான ரூபத்தையும் விகாரமான வார்த்தைகளையுங் கண்டு நடு நடுங்கினுள். அப்பொழுது ஸீதை "நான் இராமனையும் லெக்ஷ்மணனையுங் கூப்பிடுவேன். உன்னுடைய உயிர் அவர்களுடைய வில்லுக்கு இரையாகும்" என்று பயமுறுத்தி, ப்பின்னழத் தொடங்கினுள். ஆனல் இராவணன் அவ ளழுகையைக் கவனியாமல் தனது ரதத்தில் அவளை ஏற்றி லங்கா புரியை நோக்கிப் புறப்பட்டான்.


Balasaheb

# கழுகு ராஜனான ஜடாயு.


பஞ்சவடியி லிருக்கிற ஸ்ரீராமருடைய ஆச்சிரமத்திற்கு சமீபத்தில் கழுகு ராஜனான ஜடாயு வாஸஞ்செய்து கொண்டிருந்தது. ஸீதை இராவணனால் பலாத்காரமாய் அபகரித்துக்கொண்டு போகப்படுவதையும் ராமா! லெக்ஷ்மணா! என் றவள் அழுவதையுங் கண்டு இராவணனுடைய இரதத்தை வந் தெதிர்த்துத் தனது சிறகுகளுடைய சக்தியால் அவனுடைய தேரை ஒடித்து ஸாரதியையும் அதில் கட்டியிருக்குங் கோவேறு கழுதைகளையுங் கொன்றது மன்றி அவனுடைய வில்லையும் முறித் தெறிந்தது. அப்பொழுது இராவணன் கீ ழிறங்கித் தனது வாளை உருவி, ஜடாயு தைரியத்துடன் அவனைப் பலவிடங்களிற் காயஞ் செய்த போதிலும், அவ்வாளினால் அத னிரு இறகுகளையும் வெட்டிப் போட்டான். ஆகவே ஜடாயு குற்றுயிர் குலையுயிராய் க்கீழே விழுந்தது. பிறகு இராவணன் இனி அதற்குச் சண்டைசெய்யச் சக்தி இல்லை என் றறிந்து ஸீதையுடன் ஆகாய மார்க்கமாய் லங்கா பட்டணத்திற்குப் போனான்.


Balasaheb
1911

# இலக்ஷ்மணன் ஸ்ரீராமருடைய உத்திரவை மீறினது.

ஸ்ரீராம பாணத்தாற் துளைக்கப்பட்ட மாரீசன் தனது சுய ரூபத்தை எடுத்துக்கொண்டு இறந்தான். ஸ்ரீராமர் ஆச்சிரமத்தில் யாது நிகழ்ந்ததோ வென்று வெகு வியசனத்துடன் திரும்பி வரும் பொழுது அழுதுகொண்டு கண்ணுங் கண்ணீருமாய் வந்த லக்ஷ்மணனைக் கண்டு, ஸீதையைத் தனியாய் விட்டு விட்டானே என்று கோபங்கொண்டு, "ஸீதையை ஏன் தனிமையில் விட்டு வந்தாய்? ராக்ஷஸர்கள் அவளைத் தின்றிருப்பார்களே! அவளுக்கு என்ன ஸம்பவித்திருக்குமோ!" என்று லக்ஷ்மணனைக் கடிந்து கொண்டார். ஸீதையின் கொடூரமான வார்த்தைகளை நேரில் சொல்வதற்குத் தைரியமின்றி "ராக்ஷஸனுடைய பொய்யான வார்த்தைகளைக் கேட்டு ஸீதை மனோ அதைரியப்பட்டு என்னைச் சகாயஞ் செய்யும் பொருட்டு உம்மிடம் வரும்படி உத்திரவு செய்தாள்" என்று லக்ஷ்மணன் சொன்னான்.

அவர்களிருவரும் ஆச்சிரமத்திற்குத் திரும்பி வந்தவுடன் அவ்விடத்தில் ஸீதையைக் காணுமல் அங்குமிங்குந் தேடினார்கள். ஸீதையைக் காணுமல் ராகவர் மிகவும் வருத்த முற்றார். பிறகு அவர்க ளிருவரும் தற்செயலாய் ஜடாயுவைக் கண்டார்கள். "ஸீதையை இராவணன் தெற்குத் திக்கில் கொண்டு போனான்" என்று சொல்லி ஜடாயு அவர்கள் முன் தன் னுயிரை நீத்தது.



64

# ஸீதையின் ஆபரணங்களைக் கண்டெடுத்தல்.

---

ஆகாய மார்க்கமாய் இராவணனால் எடுத்துக்கொண்டு போகப் பட்ட ஸீதை அவனுக்குத் தெரியாமல் தனது மேல் வஸ்த்திரத் தைக் கிழித்து அதில் சில ஆபரணங்களைக் கழற்றி வைத்து கட்டி, க்கீழே எறிந்தாள். அப்பொழுது ருஷ்யமூகம் என்கிற மலையின் உச்சியிலிருந்த ஐந்து குரங்குகளைக் கண்டபொழுது அவர்களுஞ் சீதையைப் பார்த்து மிகவு மாச்சரிய மடைந்தன. உடனே ஸீதை யானவள் இராம லக்ஷ்மணர்கள் இந்த வழியாக என்னைத் தேடி வருவார்களானால், அவர்களுக்கு என்னைத் தெரிவிப்பதற்கு இந்த வானரர்கள் உதவி செய்வார்க ளென்கிற நம்பிக்கையுடன் வஸ்தி ரத்தில் கட்டியிருந்த நகை முடிப்பை அவர்களுடைய மத்தியில எறிந்தாள்.



# கபந்தன் என்கிற ராக்ஷஸனுடைய வரலாறு.

ஜடாயு உரைத்த பிரகாரம் ஸீதையைத் தெற்கு, த்திக்கில் தேடிக் கொண்டு போகும் வழியில் ராம லக்ஷ்மணர்கள் அனேகம் ராக்ஷஸர்களைக் கொன்றார்கள். ஒரு நாள் மிகவும் பயங்கரமான கபந்தன் என்னும் ராக்ஷஸனைச் சந்தித்தார்கள். அவனுடைய வாய் வயிற்றிலும் அவனுடைய ஒரே கண் மார்பிலு மிருந்தது. அவனுடைய துடைக ளிரண்டும் வயிற்றோடு சேர்ந்தி ருந்ததினால் அவனால் நடக்க முடியவில்லை. அப்படி இருந்தபோதிலும் மிகவும் நீண்ட தனது இரு கைகளாலும் மிருகம் முதலானதுகளைப் பிடித்துத் தின்றுகொண்டி ருந்தான்.

அவன் ராம லக்ஷ்மணர்களையும் கைகளால் பிடித்துக்கொண்டு அவர்களைத் தின்பதற்கு யத்தனிக்கையில், ஸ்ரீராமர் வாளினால் அவனது வலது கையையும் லக்ஷ்மணன் இடது கையையும் வெட்டி விட்டார்கள். பிறகு அவனுடைய சரீரத்தை எரித்த பொழுது அந்த அக்கினியிலிருந்து சாபத்தினால் தனக்கு ஏற்பட்டிருந்த அசுரவடிவை விட்டு, திவ்விய ரூபத்துடன் கிளம்பி அவர்கள் கண்ணில் தென்பட்டான். உடனே அவன் அவர்களை நமஸ்கரித்து "உங்கள் காரியம் ஸித்திக்க நீங்கள் ருஷ்யமூக மலையில் வஸிக்கும் ஸுக்ரீவன் என்கிற வானர ராஜனுடன் சினேகம் செய்து கொள்ளுங்கள்" என்று சொல்லி ஸ்வர்க்கத்திற்குப் போனான்.


Balasaheb
1911

# சபரீ என்னும் வன தேவதை.

இராம லக்ஷ்மணர்கள் கபந்தனுடைய சொல்பிரகாரம் ருஷ்யமூகம் என்கிற மலையைத் தேடிச் சென்றார்கள். வழியில் சபரீ என்கிற வன தேவதையின் ஆச்சிரமத்தின் சமீபமாய்ச் சென்றார்கள். ராம லக்ஷ்மணனுடைய வரவைக்கண்டு சபரீ மிகவும் சந்தோஷமடைந்தாள். அப்பொழுது அவள் அவர்களை நமஸ்கரித்தும் பூஜித்தும், தன் வசத்திலுள்ள மதுரமான பழங்களை ஆகாரமாகக் கொடுக்க அவர்கள் அதைப் புசித்து மகிழ்ச்சியடைந்தார்கள்.

# கிஷ்கிந்தா காண்டம் IV.

# கிஷ்கிந்தா காண்டம் IV.

---

## அட்டவணை.


| பக்கம். | | படம். |
|---|---|---|
| 38 | ஹனுமாரைக் காண்பது .. .. .. .. .. | 30 |
| 39 | சுக்கிரீவனுடைய சினேகம் .. .. .. .. .. | 31 |
| 40 | வாலியின் ஸம்காரம் .. .. .. .. .. .. | 32 |
| 41 | பிரஸரவணம் மலையில் நடந்த வரலாறு .. .. .. | 33 |
| 42 | இலக்ஷ்மணனும் சுக்கிரீவனும் .. .. .. .. | 34 |
| 43 | ஸ்ரீராமர் கணையாழியைக் கொடுத்தல் .. .. .. | 35 |
| 44 | ஹனுமாருடைய ஜனன வரலாறு .. .. .. .. | 36 |
| 45 | இந்திரனுக்கும் மாருதிக்கும் யுத்தம் .. .. .. | 37 |
| 46 | சம்பாதியின் வரவு .. .. .. .. .. .. | 38 |


Balasaheb
1911

72

# ஹனுமாரைக் காண்பது.

பிறகு ராம லக்ஷ்மணர்கள் விடியற்காலத்தில் பம்பா என்கிற தடாகத்திற்குச் சென்று, காலைக் கடன்களை முடித்துக்கொண்டார்கள். அப்பொழுது வானர ராஜனான சுக்கிரீவன், அதி தீரர்களும், மிகவும் வல்லமையுள்ள வர்களும், கைகளில் வில்லும் அம்பும் ஏந்தினவர்களா யுள்ள ராம லக்ஷ்மணர்களைத் தடாகக் கரையில் ருஷியமூக மலையிலிருந்து கண்டவுடன் மிகவும் நடுங்கினான். சுக்கிரீவன் உடனே அவர்கள் யாவரென்று அறிய முடியாமல், அவர்களுடன் சிநேகங் கொள்ள விரும்பி அவர்கள் யாவரென்று தெரிந்து கொண்டு வரும்படி ஹனுமாரை அவர்களிடம் அனுப்பினான். மாருதி அவர்களிடம் சென்று நமஸ்கரித்து வணக்கத்துடன் பின் வருமாறு சொன்னார். "அதிக பராக்கிரம முள்ள வானர குலத்திற் கரசனாகிய வாலி தனது சகோதரன் சுக்கிரீவனை ஊரை விட்டுத் துரத்திவிட்டு, அவனுடைய மனைவியையும் பலாத்காரமாய் அபகரித்துக்கொண்டான். இந்த சுக்கிரீவன் இதோ காணப்படுகிற ருஷியமூக மலையின்மேல் நான்கு வானரர்களுடன் வசித்து வருகிறான். உங்களுடைய சகாயத்தை விரும்புகிறபடியால் நீங்கள் அவனுக்கு இந்த சமயத்தில் உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்." உடனே இராமரும் அவனைச் சிநேகிக்க விரும்பினார். ஆகவே ராம லெக்ஷ்மணர்கள் சம்மதத்தின்மேல் மாருதி அவர்களைச் சந்தோஷத்தோடு இட்டுக்கொண்டு சென்றார்.


Balasaheb
1912

# சுக்கிரீவனுடைய சினேகம்.


பிறகு ராமரும் சுக்கிரீவனும் தாங்கள் உயிரோடிருக்கும் வரையில் சினேகத்துட னிருப்பதாகவும் ஒருவருக் கொருவர் ஆபத்துக் காலங்களில் ஒத்தாசை செய்துக் கொள்ளுகிறதாகவும் அக்கினி சாக்ஷியாக வாக்குத் தத்தஞ் செய்து கொண்டார்கள். அப்பொழுது சுக்கிரீவன் ஸீதையால் கீழே போடப்பட்ட நகை மூட்டையைக் கொண்டு வந்து வைத்தவுடன் ஸ்ரீராமர் அது தன் மனைவி ஸீதையினுடைய தென்று உணர்ந்து ஸீதாபிராட்டியரைக் காணவில்லையே என்று பட்ட வருத்தத்தை நாம் உணர்ந்து வாயால் சொல்ல முடியுமோ? லக்ஷ்மணன் கால் நகைகளை மாத்திரம் ஸீதாபிராட்டியா ருடைய தென்று உணர்ந்தான். அப்பொழுது சுக்கிரீவன் ஸீதையைத் தேடுவதிலும் திரும்பி அவரை அழைத்து வருவதிலும் தகுந்த உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தான். அதற்குப் பதிலாக ஸ்ரீராமரும் வாலியைக் கொன்று அவனைச் சிங்காதனத்தில் வைப்பதாக வாக்களித்தார்.


BalaSaheb

# வாலியின் ஸம்காரம்.

முன் காலத்தில் வானரர்களான வாலியும் சுக்கிரீவனும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் எள்ளும் எண்ணெய்யும் போலவும், நகமுஞ் சதையும் போலவும் உள்ள சகோதரர்களா யிருந்தார்கள். ஒரு காலத்தில் வாலி துந்துபி என்பவனுடைய புத்திரனை மாயாவி என்கிற அசுரனுடன் யுத்தஞ் செய்வதற்காகப் புறப்பட்டு அவ்வசுரன் வசிக்கும் குகை வாயிலில் தான் வருகிறவரையில் பாது காக்கும்படி சுக்கிரீவனுக்கு உத்திரவு செய்து, தான் உள்ளே புகுந்தான். வெகு நாட்க்கள் வரையில் வாலி திரும்பி வாராததைக் கண்டு தனது சகோதரன் இறந்துவிட்டான் என்று நினைத்து அவ்வசுரன் வெளியில் வாராதபடி அக்குகை வாயிலைக் கெட்டியா யடைத்து விட்டுச் சுக்கிரீவன் கிஷ்கிந்தா நகரஞ் சென்று அரசு செலுத்தி வந்தான். வெகு காலஞ் சென்ற பிறகு வாலி அவ்வசுரனைக் கொன்றுவிட்டுச் சுக்கிரீவன் குகை வாயிலில் இருக்கிறானே வென்று வர அவ்விடத்தில் வெளியே வர முடியாதபடி அடைத்திருப்பதைக் கண்டு கோபமுற்றுத் தன் பலாத்காரத்தினால் வெளியே வந்து தன் தம்பி அரசு புரிந்து வரும் பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அப்பொழுது சுக்கிரீவனை வாலி சிங்காதனத்திலிருந்து தள்ளிவிட்டது மன்றிப் பட்டணத்தி லிருந்தும் துரத்திவிட்டான். அப்பொழுது சுக்கிரீவன் தனது நான்கு மந்திரிகளுடன் மாத்திரம் ருஷியமூக மலையில் வசிக்கச் சென்றான். ஏனென்றால் ருஷியமூக மலைக்கு வாலி சென்றால் அவனுடைய தலை வெடித்துப்போகு மென்று முன் காலத்தில் அவனுக்கு ஒரு சாபம் ஒரு முனிவரால் கொடுக்கப்பட்டிருந்தது.

சுக்கிரீவன் ஸ்ரீராமருடன் ஐக்யம் செய்துகொண்ட பிறகு வாலியை மல் யுத்தத்திற்குக் கூப்பிட்டான். அந்த யுத்தத்தில் சுக்கிரீவன் களைத்துப்போன பொழுது ஸ்ரீராமர் வாலியை தன்னுடைய ஒரு பாணத்தினால் ஸம்கரித்தார். பிறகு லக்ஷ்மணன் ராமருடைய உத்திரவின்படி கிஷ்கிந்தைக்குச் சென்று சுக்கிரீவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தான்.


1914

# பிரஸரவணம் மலேயில் நடந்த வரலாறு.

---

சுக்கிரீவன் கிஷ்கிந்தையில் ராஜாவான பிறகு பல திக்குகளினின்று தனக்குக் கீழ்பட்டுள்ள வானரர்களை வரவழைத்துச் சீதையைத் தேடுவதற்கு அனுப்பத் தீர்மானஞ் செய்திருந்தான். ஆனால் இராஜபதவியினு லுண்டான சுகம் கிடைத்த பொழுது அந்த நிச்சயங்களை மறந்துவிட்டான். அப்பொழுது ராம லக்ஷ்மணர்கள் பிரஸரவணம் மலேயில் வாஸஞ் செய்துக்கொண்டிருந்தார்கள். வருஷகாலம் முடிந்த பிறகு சுக்கிரீவன் பட்டாபிஷேகமான பிறகு தன்னை வந்து பார்க்காததினுல் ஸ்ரீராமர் வியசன மடைந்தார். ஸீதை எங்கே யிருக்கிறுள்? அவளுடைய நிலே எவ்விதமாயிருக்குமோ? என்கிற விசாரத்தால் தினம்தோறும் ஸ்ரீராமருக்கு வியசனம் அதிகரித்துக் கொண்டிருந்தது. லக்ஷ்மணன் அவருடைய வியசனத்தை நீக்குவதற்காகச் செய்த முயற்சிகள் எல்லாம் பயன்படவில்லே.


Balasaheb
1911

# இலக்ஷ்மணனும் சுக்கிரீவனும்.

ஸ்ரீராமர் லக்ஷ்மணனைச் சுக்கிரீவனிடம் போய் அவன் முன் செய்த வாக்குத் தத்தத்தை ஞாபகமூட்டும்படி அனுப்பினர். அப்பொழுது சுக்கிரீவன் தாரா, ருமா முதலியவர்களான அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளுடன் சுகித்துக்கொண்டிருந்தான். அதைப் பார்த்து லக்ஷ்மணன் மிகவும் கோபங்கொண்டு சுக்கிரீவனை நிந்தித்து "வாலியைக் கொன்ற ஸ்ரீராமருடைய பாணம் இப்பொழுதும் அவருடைய அம்புராத்தூணியில் இருக்கிறது. வாலி இறந்துபோன வழியானது இப்பொழுதும் அடைக்கப்படவில்லை" என்று சொன்னன். அதைக் கேட்டு சுக்கிரீவன் அதிகம் பயந்து லக்ஷ்மணனை சமாதானப்படுத்தும்படி தாரையுடன் சொல்லி அவளுக்குப் பின்னல் ஒளிந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது தாரை பலவிதமான நற்போதனைகளைச் சொல்லி லக்ஷ்மணனைச் சாந்தப்படுத்தினள். பிறகு சுக்கிரீவனுடன் ஸ்ரீராமரிடம் லக்ஷ்மணன் வந்து சேர்ந்தான்.


BalaSahib
1911

# ஸ்ரீராமர் கணையாழியைக் கொடுத்தல்.

சுக்கிரீவன் ஸ்ரீராமருடைய உத்திரவுப்படித் தனக்குள்பட்ட பல திக்குகளிலுள்ள வானரர்களை வரவழைப்பதற்கு சில சேவகர்களை அனுப்பினான். சில நாட்கள் சென்றதும் ஆயிரக்கணக்கான வானரர்கள் பிரஸ்ரவணத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அதில் தலைவர்களை நான்காய் பிரித்து நான்கு திசைகளிலும் தேடும்படி அவர்களை ஆக்ஞ்யாபித்தார். ஆனால் ஸீதையை இராவணன் கொண்டுபோனதை முன்னமேயே சுக்கிரீவன் பார்த்ததினால் தன் சேனையில் அதி சூரர்களும் முக்கியமானவர்களுமான வானரர்களைத் தெற்கு திக்கில் தேடும்படி அனுப்ப நிச்சயித்து ஹனுமார், அங்கதன், ஜாம்பவான் முதலான வல்லமையுள்ள வானரர்களை ஆக்ஞ்யாபித்தார். இவ்வீரர்களும் தெற்கு திக்கை நோக்கி புறப்பட்டார்கள். அப்பொழுது சுக்கிரீவன் ஸ்ரீராமரிடம் வந்து "இந்த ஹனுமான் வானரர்களில் அதி பராக்கிரமம் பொருந்தினவனும் புத்திமானு மானதால் இவனே இந்தக் காரியத்தை சபலமாய் முடித்துக்கொண்டு வருவானென்று என் மனதில் உறுதியாகத் தோன்றுகிறது," என்று சொன்னான். உடனே ஸ்ரீராமர் தனது கணையாழியை ஹனுமாரிடம் கொடுத்து ஸீதாதேவியுடைய ரூபலாவண்யங்களை விவரமாய் அவனுக்குச் சொல்லிப் போக உத்திரவு கொடுத்தார். அவர்கள் போனவுடன் ஸ்ரீராமர் ஹனுமானைப் புகழ்ந்து பேசவேண்டிய காரணமென்ன வென்று சுக்கிரீவனைக் கேட்டபொழுது அவன் ஹனுமானுடைய ஜனன வரலாற்றைத் தெரிவித்தான்.



84

## ஹனுமாருடைய ஜனன வரலாறு.


சாந்திரமான வருஷம் முதல் மாஸம் பௌர்ணமி சூர்யோதய காலத்தில் அஞ்சனா தேவிக்கு வாயு பகவானால் மாருதி என்கிற வானரன் பிறந்தான். அவன் பிறந்த காலத்தில் அவனுடைய ஆகாரத்திற்கு வேண்டியகனி முதலானதுகளைக் கொண்டு வருவதற்கு அஞ்சனாதேவி போயிருந்தாள். அப்பொழுது ஆகாயத்தில் உயர்ந்து வருகிற பால சூரியனைக் கண்டு மாருதி பழ மென்று நினைத்து அவருக் கெதிராகத் தாவினான். முன்னூறு யோஜனை தூரம் சூரியனுக்கு நேரே தாண்டி அவருடைய கிரணங்களால் தகிக்கப்பட்ட போதிலும் மாருதி அவருக்கு எதிராகவே சென்றான். சூரியனுடைய சமீபம் சென்று அவருடைய கதியைத் தடங்கல் செய்தான்.


BalaSaheb
1911

# இந்திரனுக்கும் மாருதிக்கும் யுத்தம்.

இதை யறிந்த உடனே இந்திரன் தேவ ஸேனைகளுடன் மாருதி யிருக்குமிடத்திற்கு வந்தான். மாருதி அந்த தேவர்கள் எல்லோரையும் தோற்கடித்துத் துரத்திவிட்டான். இறுதியில் ஐராவத மென்னும் யானையின்மே லேறிக்கொண்டிருந்த இந்திரன் தன் வச்சிராயுதத்தால் மாருதியை அடித்தான்.

மலைகளைக்கூடப் பிளக்கும்படியான சக்தியை யுடைய அந்த வச்சிராயுதம் மாருதியின் கன்னத்தில் தட்டினபொழுது சிறிது காயம் செய்தது. அவ்விதம் காயப்பட்டுத் தழும்புள்ளவனு யிருப்பதால் மாருதி ஹனுமானென்னும் பெயருடையவ னுனன்.



Balasaheb
1912

## சம்பாதியின் வரவு.


ஹநுமார், ஜாம்பவான், அங்கதன், முதலானவர்கள் ஸீதா தேவியைத் தேடிக்கொண்டு, அனேகங் கஷ்டங்களை யனுபவித்த பிறகு தெற்கு ஸமுத்திரக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். ஸீதா பிராட்டியரைக் கண்டு தேடி அவளைக் கண்டுவர முடியாதென்ற சிந்தையால் அவர்கள் துக்க ஸமுத்திரத்தில் மூழ்கினார்கள். அப் பொழுது அவ்விடத்தில் வசித்த ஜடாயுவின் சகோதரனாகிய சம்பாதி "இராவணன் ஸீதாதேவியாரை லங்கைக்குக் கொண்டு போய் அசோக வனத்தில் ஒரு கைதியாக வைத்திருக்கிறான்" என்று அவர்களுக்குச் சொன்னான். இச்செய்தியைக் கேட்கவே வானரர்க ளெல்லோரும் சந்தோஷ மடைந்து, ஹநுமாரையே ஸமுத்திரத்தைத் தாண்டி ஸீதாபிராட்டியரைக் கண்டுவர வேண்டு மென்று தீர்மானித்தார்கள். அதற்கு உடன்பட்டு ஹநுமார் மஹேந்திர மென்னும் மலையின் உச்சியில் ஏறிக்கொண்டு ஸமுத் திரத்தைத் தாண்ட ஆயத்தமானார்.

# ஸுந்தர காண்டம் V.

# ஸுந்தர காண்டம் V.

## அட்டவணை.


| பக்கம். | | படம். |
| --- | --- | --- |
| 49 | ஆஞ்சநேயர் ஸமுத்திரம் தாண்டுதல் .. .. .. | 39 |
| 50 | இலங்கையின் கோட்டை வாயில் .. .. .. .. | 40 |
| 51 | இராவணனுடைய அந்தப்புரம் .. .. .. .. | 41 |
| 52 | ஹனுமார் ஸீதாபிராட்டியரைக் காணுதல் .. .. .. | 42 |
| 53 | இராவணன் வருகை .. .. .. .. .. | 43 |
| 54 | ஹனுமார் கணையாழியை ஸீதாபிராட்டியாரிடம் கொடுத்தல் | 44 |
| 55 | ஜம்புமாலி வதம் .. .. .. .. .. .. | 45 |
| 56 | இலங்காதஹனம் .. .. .. .. .. .. | 46 |
| 57 | ஹனுமார் எரிந்துகொண்டிருந்த வாலை யணைத்தல் .. | 47 |
| 58 | ஹனுமார் இராமரிடம் செல்லுதல் .. .. .. .. | 48 |


Balasahel

# ஆஞ்சநேயர் ஸமுத்திரம் தாண்டுதல்.


ஹனுமானனவர் எல்லாத் தேவர்களையும் நமஸ்கரித்து மகேந்திர மென்னு மலையி னுச்சியிலிருந்து தனது முழு பலத்துடன் தாவினர். அப்பொழுது ஸமுத்திரத்தின் கரையிலிருந்த வானரர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் செய்த தொனி ஹனுமாருக்கு அதிக உற்சாகத்தை யுண்டாக்கியது. வழியில் ஸமுத்திரத்திலுள்ள ஸிம்ஹிகா என்னு மொரு ராக்ஷஸியால் அனேக மிடையூறுகள் செய்யப்படவே ஹனுமார் மிகுந்த கோபத்தோடு தனது பலத்தால் அவளைக் கொன்றுவிட்டுப் பிறகு சிரம மதிகமில்லாமலேயே ஹனுமார் சூரிய னஸ்தமிக்கு முன்னரே லங்காதீவை அடைந்தார்.


Balasaheb

# இலங்கையின் கோட்டை வாயில்.


---

ஹனுமார் இலங்கையில் ஒருவர் கண்ணுக்குந் தென்படாதிருக்கும் பொருட்டுத் தனது உருவத்தைக் குறுக்கிக்கொண்டு எங்குஞ் சப்தமில்லாமலிருக்கும் வேளையில் இலங்கைக் கோட்டை வாசலை யணுகினார். கோட்டை வாயிலிற் காவலாயிருந்த லங்கிணி என்னு மொரு ராக்ஷஸி அவரை உட்செல்ல வொட்டாமல் தடுக்க அவள் ஒரு ஸ்திரீயானபடியால் தனது வலக்கையா லவளை யடிக்காமல் இடக்கையால் தன் முழு வலிமையோடு ஒரு அறை அறைந்தார். அப்பொழுது அந்த ராக்ஷஸி அவ்வறை பொறுக்க முடியாமல் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு கீழே மூர்ச்சையாய் விழ ஹனுமாரும் கோட்டைக்குள் பிரவேசித்தார்.



# இராவணனுடைய அந்தப்புரம்.

ஹனுமார் அங்கே ஸீதையைக் காணவேண்டு மென்று அனேக மாளிகைகள் தேடியுங் காணுமல் இராவணனுடைய அந்தப்புரத்தில் நுழைந்தார். அங்கே அவ்விராக்ஷஸன் தன் மனைவி மண்டோதரியுடன் சுகித்திருக்கக் கண்டார். இன்னு மவ்விடத்தில் அவ்விரவின் முதற்சாமத்தில் பலவிதமான வாத்தியங்களை வாசித்து, மதுபானஞ்செய்து அதினுலுண்டான மயக்கத்தால் அவ்வாத்தியங்களை ஆலிங்கனஞ் செய்துகொண்டும் கலைந்துபோன வஸ்திரங்களுடன் இன்னும் அனேகம் ஸ்திரீகளையும் கண்டார். மண்டோதரியை முதலில் ஸீதையோ வென்று நினைத்து, பிறகு ஸ்ரீராமர் சொல்லியிருந்த ஸீதையின் சில முக்கியமான அடையாளங்களைக் காணுமையால் அவளல்ல வென்று நிச்சயித்தார்.


Balasaheb

# ஹனுமார் ஸீதாபிராட்டியரைக் காணுதல்.

இராவணனுடைய அரண்மனையில் ஒரு விடத்திலும் ஸீதை யைக் காணமல் போகவே அவரைக் காணவேண்டிய நிமித்தம் தான் ஸமுத்திரத்தைத் தாண்டி வந்ததையும் தான் வழியில் பட்ட கஷ்ட நிஷ்ரேங்களையும் நினைத்து மனம் வருந்தினர். தான் பட்ட கஷ்டமும் நிஷ்ரேமும் வீண்தானே வென்றும் நினைக்க லானர். கடைசியில் ஸீதையைக் காணமையால் வெறுப்படைந்து அரண்மனே அருகாமையிலிருந்த அசோக வனத்தை யடைய அவ்விடத்தில் எங்கு மலைந்து திரிந்து பார்க்க ஒரு அசோக விரு க்ஷத்தின் கீழ் மிகவும் மெலிந்த தேகத்துடனும் ஆழ்ந்த சிந்தனை யில் மனதைச் செலுத்திக்கொண்டிருந்த ஸீதாபிராட்டியாரைக் கண்டார். அவரோ ஸதா ஸர்வகாலமும் ராம நாமத்தையே உச்சரித்துக்கொண் டிருந்தமையால் அவரை ஸீதை என்று நன் குணர்ந்தார். அவ்விடத்தில் கோர ரூபமும் பயங்கரமான பார் வையோடுங் கூடிய அனேக மிராக்ஷஸிகள் ஸீதையைச் சுற்றிக் காவல் செய்துக்கொண்டிருப்பதையுங் கண்டார்.


BalaSaheb
1911

# இராவணன் வருகை.

விடியற்காலத்தில் இராவணனுடைய அந்தப்புரத்திலிருந்து ஒரு சப்தம் கேட்கவே ஹனுமாரானவர் ஒரு சிம்சுபா விருக்ஷத்தின் அடர்ந்த கிளைகளின் நடுவே ஒளிந்துக்கொண்டார். அப்பொழுது இராவணன் மண்டோதரி முதலான ஸ்திரீகளுடன் அவ்விடம் வந்ததைக் காணலுற்ருர். அவர்களுட் சிலர் தீவட்டிகளையும், சிலர் சாமரங்களையும், இன்னுஞ் சிலர்கள் நிறைந்த குடங்களையுங் கொண்டு வந்தார்கள். அப்பொழுது இராவணன் ஸீதையிடம் "நீ இனி இராமனை நினையாதே, எனக்கு உட்படு, உன்னைத் தவிர எனக்கு வேருென்றிலும் ஆசை யில்லை. இராமன் ஒரு நரமனிதனுகையால் நானிருக்கு மிடத்திற்கு வர முடியாது; வந்தாலும் யாதொரு தீங்குஞ் செய்ய முடியாது." என்று சொன்னுன். இராவணனுடைய இத்தகைய வார்த்தைகளைக் கேட்டு "உன்னுடைய வல்லமையையும் பலத்தையும், ஸாமர்த்தியத்தையும், புகழ்ந்து கர்வ மடையாதே. அப்படியானுல் நீ ஸ்ரீராமரையும் லெக்ஷ்மணரையும் ஏன் நேரில் பார்க்கக்கூடாது. இராமரும் இலக்ஷ்மணரு மில்லாத தருணத்தில் கள்வனைப்போல் என்னைத் திருடிக்கொண்டு வந்தாய் அல்லவா? ஸ்ரீராமர் ஸமூத்திரத்தில் ஒரு அணையைக் கட்டி ஸ்திரமாகச் செய்து அவரது பாணங்களால் உன்னுடைய உயிரையும் உன் புத்திரர்களுடைய உயிரையும் வாங்குவார்." என்று மறுமொழி பகன்ருர். தன்னை நிந்தித்துக் கூறிய ஸீதையின் வார்த்தைகளைக் கேட்டுக் கோபாவேசனுகித் தன்னுடையினின்று வாளையுருவி ஸீதையைக் கொல்ல எத்தனித்தபொழுது மண்டோதரி அவனைத் தடுத்து அனுதையாயும் மெலிந்தவளுமான ஸீதையைக் கொல்லாது மன்னிக்கவேண்டுமென்று வேண்டினுள். உடனே இராவணன் "இன்னும் இரண்டு மாதத்திற்குள் இவள் என்னுடைய இஷ்டத்திற்கு உடன்படாதிருப்பளேல் இவள் எனக்கு ஆகாரமாக வேண்டியது நிச்சய"மென்று சொல்லி அந்தப்புரத்தை நோக்கிச் சென்ருன்.



BalaSaheb

102

# ஹனுமார் கணையாழியை ஸீதாபிராட்டியாரிடம் கொடுத்தல்.

இராவணன் சென்றவுடனே ஸீதையைக் காத்துக்கொண்டிருந்த ராக்ஷஸிகள் தங்களாலான மட்டும் அவருடைய மனத்தைத் திருப்பும்படி முயன்றார்கள். பயன்படாமல் போகவே அவர்கள் களைத்து நன்றாய் உறங்கிவிட்டார்கள். அப்பொழுது ஸீதாபிராட்டியார் இவ்விதமான பெரிய கஷ்டத்தினின்று தன்னைத் தப்பிக்கொள்வது அசாத்தியமான காரியமென்று நினைத்தார். அச்சமயத்தில் ஹனுமார் மரத்தின்மேலிருந்தபடி ஸீதாதேவியுடன் பேசத் தொடங்கினார். அப்பொழுது ஸீதாதேவியர் இராவணன் குரங்கு உருவங்கொண்டு பேசுகிறானோ வென்று பயந்து நடுக்கமுற்றார். அதை யறிந்த ஹனுமார் தனது பெயரைச் சொல்லி "நான் ஸ்ரீராமருடைய தூதன். வானர குலத்திற் கரசனாகிய சுக்கிரீவனுடைய மந்திரி உங்களைத் தேடவேண்டிய நிமித்த மவர்களால் அனுப்பப்பட்டேன்." என்று சொன்னார். ஸ்ரீராமருடைய தூதன்தான் என்று உறுதி புகட்டுமாறு ஸ்ரீராமர் கொடுத்தருளிய கணையாழியை ஸீதாபிராட்டியரின் கையில் கொடுத்தார். ஸீதாதேவியு மதை மிகுந்த ஸந்தோஷத்துடன் வாங்கிக்கொண்டு தன்னை இரண்டு மாதத்திற்குள் சிறைமீட்கும் படிக்கும் சீக்கிரம் போய் இராமரிடம் தான் படும் கஷ்டத்தைச் சொல்லும்படிக்கும் ஹனுமாரைக் கேட்டுக்கொண்டார். பிறகு ஹனுமார் "நான் தங்களைப் பார்த்தது உண்மை என்று நம்பும்படி ஏதாவதொரு அடையாளம் கொடுக்கவேண்டு" மென்று வேண்ட ஸீதாதேவியரும் ஒரு சூடா இரத்தினத்தை யவர் கையில் கொடுத்தார். "இவ்வாபரணத்தைக் கண்டவுடன் என்னுடைய தென்று ஸ்ரீராகவர் அறிந்து கொள்வார்," என்று சொல்லி கண்களில் முத்துப்போலக் கண்ணீர் வடித்து ஹனுமாரை இராமரிடம் செல்லும்படி விடைகொடுத் தனுப்பினார்.



# ஜம்புமாலி வதம்.

பிறகு சூரியோதயத்தில் அசோக வனத்தில் ஸீதை இருக்கும் சிம்சுபா விருக்ஷத்தைத் தவிர மற்ற விருக்ஷங்களை யெல்லாம் அழித்துவிட்டார். அப்பொழுது தன்னை எதிர்க்க வந்த காவல் காரர்களை எல்லாம் ஹனுமார் ஓர் இருப்புலக்கையால் கொன்றார். ஸீதைக்குக் காவலாக இருந்த இராக்ஷஸிகளிற் சிலர் உடனே இச் செய்தியை இராவணனிடம் சொல்ல, அவன் ஜம்புமாலி என்னும் ராக்ஷஸனை அனேகம் இராக்ஷஸ சைனியத்துடன் அனுப்பினன். ஹனுமாரோ அவனையும் அவன் சைனியத்தையும் எதிர்த்து ஜம்புமாலியை ஒரே அடியில் மாய்த்து அவனுடைய சைனியத்தையுஞ் சின்ன பின்னஞ் செய்துவிட்டார். இதைக் கேட்டு இராவணன் தனது குமாரன் அக்ஷனை ஒரு பலத்த சைனியத்துடன் அனுப்ப அவர்களுக்கும் முன்போல் அக்கதியே நேர்ந்தது. பிறகு முடிவில் இந்திரஜித் மிகத் தந்திரமாய் ஹனுமாரை வலையில் கட்டி இராவணனிடம் கொண்டு வந்தான்.


Balasaheb
1914

106

# இலங்காதஹனம்.


---

ஹனுமாரைக் கொண்டுவந்த வுடனே இராவணன் கோபத்துடன் அவருடைய வாலில் கந்தைத் துணிகளைச் சுற்றி எண்ணெயை ஊற்றி அதில் நெருப்பைக் கொளுத்தும்படி வேலைக்காரர்களுக்கு ஆக்கினை யிட அவ்வாறே அவருடைய வாலில் சுற்றிய எண்ணெய்த் துணியில் நெருப்பைக் கொளுத்தி தாரை தம்பட்டங்களுடன் ஊர் முழுவதும் சுற்றி வரும்படி செய்தார்கள். அப்பொழுது ஹனுமார் தன் சரீரத்தை மிகவுஞ் சிறிதாய்ச் செய்துக் கொண்டு கழுத்திலிருக்குங் கட்டைத் தளர்த்திக்கொண்டு ஸமீபத்திலிருந்த ஒரு இருப்புலக்கையால் தன்னுடன் வந்தவர்களைக் கொன்றார். பிறகு எரிந்துக்கொண்டி ருக்கிற தன்னுடைய வாலுடன் வீடு வீடாகத் தாவிக்கொண்டு இலங்கை முழுவதும் தஹிப்பித்தார். அப்பொழுது அந் நகரத்திலுள்ள எல்லா ஸ்திரீகளும் குழந்தைகளும் தெருவில் தாறுமாறாய் ஓட ஆரம்பித்தார்கள். சற்று நேரத்தில் பட்டணம் முழுவதும் எரித்துவிட்டார்.


Balasaheb

# ஹனுமார் எரிந்துகொண்டிருந்த வாலை யணைத்தல்.

ஹனுமார் ஸமுத்திரத்திற்குச் சென்று எரிந்துகொண்டிருந்த தனது வாலை ஸமுத்திரத்தில் தோய்க்க அணைந்தது. அவர் எரிந்துகொண்டிருந்த இலங்கையைப் பார்த்து ஆனந்த மடைந்தார். ஆனல் அசோகவன மெரிந்துகொண்டி ருந்தமையால் ஸீதாதேவியார்க்கும் ஆபத்து நேர்ந்திருக்குமோ வென் ருலோசித்து அதிக வியசனத்துடன் அவ்விடஞ் சென்று பார்க்க அவளுக்கு யாதொரு தீங்கும் நேரிடாதிருக்கக் கண்டு சந்தோஷமடைந்தார். அப்பொழுது ஹனுமார் "ஸ்ரீராமர் கூடிய சீக்கிரம் இவ்விடம் வந்து இராவணனை ஸம்ஹாரஞ் செய்து தங்களைச் சிறைமீட்டுக்கொண்டு போவார்," என்று ஸீதாதேவியிடஞ் சொல்லிவிட்டு இராமரிடம் போகப் புறப்பட்டார்.


Balasaheb

# ஹனுமார் இராமரிடம் செல்லுதல்.

ஹனுமார் உடனே ஸமுத்திரத்தை மறுபடியும் தாண்டித் தனது வரவை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வானரர்களிடம் லங்கையில் நடந்த ஸமாச்சாரத்தைச் சொன்னார். பிறகு அவர்க ளெல்லோரு மொன்றாய்ப் புறப்பட்டு பிரஸரவணம் மலையிலிருந்த ஸ்ரீராமரிடஞ் சென்றார்கள். பிறகு ஹனுமார் லங்கையில் நடந்தவைகளை எல்லாம் இராமரிடஞ் சொல்லி ஸீதை கொடுத்த சூடா ரத்தினத்தை அவர் முன் வைத்தார். அப்பொழுது ஸ்ரீராமர் அது ஸீதையினுடைய ஆபரணமென் றறிந்து, ஹனுமாரை ஆலிங்கனஞ் செய்துகொண்டார். பிறகு சுக்கிரீவன் ஆயிரக்கணக்கான தனது வானரப்படைகளை ஒருமிக்கச் சேர்த்து இராம லெக்ஷ்மணர்களுடன் தெற்கு ஸமுத்திரத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

# யுத்த காண்டம் VI.

# யுத்த காண்டம் VI.

## அட்டவணை.


| பக்கம். | | படம். |
|---|---|---|
| 61 | விபீஷணன் ஸ்ரீராமரைச் சரண மடைந்தது .. .. | 49 |
| 62 | ஸமுத்திரத்தின் கர்வ மடக்குதல் .. .. .. .. | 50 |
| 63 | ஸமுத்திரத்தில் அணை கட்டுவித்தல் .. .. .. .. | 51 |
| 64 | இராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் யுத்தம் .. .. .. | 52 |
| 65 | கும்பகர்ண வதம் .. .. .. .. .. .. | 53 |
| 66 | இந்திரஜித்துடன் யுத்தம் .. .. .. .. .. | 54 |
| 67 | இலக்ஷ்மணனை சக்தி என்ற ஆயுதத்தால் அடித்தல் .. .. | 55 |
| 68 | இராவணனுடைய வதம் .. .. .. .. .. | 56 |
| 69 | ஸீதாதேவி அக்கினியால் பரிசுத்தமாகுதல் .. .. .. | 57 |
| 70 | புஷ்பகம் என்னும் ஆகாய விமானம் .. .. .. .. | 58 |
| 71 | ஸ்ரீராமர் அயோத்தியா நகரம் பிரவேசித்தல் .. .. | 59 |
| 72 | ஸ்ரீராம பட்டாபிஷேகம் .. .. .. .. | 60 |


BalaSaheb
1912

# விபீஷணன் ஸ்ரீராமரைச் சரண மடைந்தது.

ஹனுமான் லங்கையைவிட்டுப் போன பிறகு ராவணனுடைய சகோதரனுன விபீஷணன் அனேகம் மந்திரிகளிருக்கிற சபையில், ராவணனுக்கு ஸீதாதேவியை ஸ்ரீராமனிடம் திருப்பிக் கொடுக்கும் படி உபதேசம் செய்தான். இராவணன் அதை ஒப்பாமல் மிகவும் கோபத்துடன் விபீஷணனை நிந்தித்து அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டான். ஆனதால் விபீஷணன் அந்த அரண்மனையை விட்டுத் தனக்குச் சினேகமுள்ள நான்கு மந்திரிகளுடன் ஸமுத்திரத்தைத் தாண்டி, "நான் இராவணனுடைய சகோதரனுயிருந்தபோதிலும் என்னை உமது சுகிருத்தாக அங்கீகரிக்க வேண்டு" மென்று ஸ்ரீராமரைப் பிரார்த்தித்தான். இராவணனுடைய தம்பி யானதால் விபீஷணனை நம்பக்கூடாதென்று சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டு அனேகம் வானரர்கள் ஆயுதங்களுடன் அவனை எதிர்த்தார்கள். அப்பொழுது ஸ்ரீராமர் அந்த வானரர்களைத் தடுத்து விபீஷணனுக்கு அபயம் கொடுத்தார். பிறகு விபீஷணன் தன் வரலாற்றை ஸ்ரீராமரிடம் சொன்னபொழுது "உன் சகோதரனுன இராவணனை ஸம்காரம் செய்து உனக்கு இலங்கையில் பட்டாபிஷேகஞ் செய்து வைக்கிறேன்" என்று வாக்குக் கொடுத்தார்.


1911

# ஸமுத்திரத்தின் கர்வ மடக்குதல்.

எவ்விதம் ஸமுத்திரத்தைத் தாண்டி சேனையுடன் லங்கைக்குப் போவதென்று ஸ்ரீராமர் வியசன மடைந்தார். ஸமுத்திர ராஜனைச் சந்தோஷப்படுத்துவதற்கு மூன்று நாள் பூஜை முதலானதுகள் செய்தும் ஸமுத்திர ராஜன் அவைகளை ஆதரிக்கவில்லை. அப்பொழுது ஸ்ரீராமர் தன் வில்லை வளைத்து பாணம் தொடுப்பதற்கு யத்தனிக்கையில் ஆகாயம் முழுமையும் மேகங்களால் மூடப்பட்டதாயிருந்தது. இலக்ஷ்மணன் உடனே ஸ்ரீராமரது வில்லைப் பிடித்துக்கொண்டு ஸமுத்திர ராஜனை சிக்ஷிக்கவேண்டா மென்று வேண்டினன். அச்சமயத்தில் ஸமுத்திர ராஜன் மானிட உருவங் கொண்டு ஸ்ரீராமர் முன்னில் வந்து "அறிவில்லாம லிருக்கிற என்னை நீங்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும். தேவ தச்சனுடைய புத்திரனுன நளன் என்கிற வானரனை என்மேல் அணை கட்டும்படி உத்திரவு செய்தால் அதை நான் தாங்கிக்கொள்ளுகிறேன்" என்று சொல்லி ஸ்ரீராமரை வணங்கி மறைந்து போனுன்.


Babasaheb

# ஸமுத்திரத்தில் அணை கட்டுவித்தல்.

நளன் என்கிற வானரன் ஸ்ரீராமருடைய உத்திரவின்படி ஸமுத்திரத்தில் அணை கட்டுவதற்கு ஆரம்பித்தான். அவன் அந்த வேலையில் சமர்த்தனானதால் அவனுக்குள்பட்டு அனேகம் வானரர்கள் பெரியதான பாறைக் கற்களைக் கொண்டுவந்து ஸமுத்திரத்தில் போட்டார்கள். வேறு சிலர் அணை கட்டுவது நேராயிருக்கும்படி நூல்களைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். இன்னுஞ் சிலர் அளவுகோல்களால் அளந்துகொண்டிருந்தார்கள். அனேகங் கோடி வானரர்களுடைய உதவியால் அணை சீக்கிரம் கட்டி முடிந்தது. ஸ்ரீராமர் இலக்ஷ்மணன் சுக்கிரீவன் முதலானவர்கள் அந்த அணை வழியாக எல்லா சேனைகளுடன் சுவேலா சலத்தின் உச்சியில் கூடாரம் அடித்தார்கள்.


Bala Saheb
1911


# இராவணனுக்கும் சுக்கிரீவனுக்கும் யுத்தம்.

இராவணன் விபீஷணனை லங்கையிலிருந்து துரத்திவிட்ட பிறகு ஸ்ரீராமர் இவ்வளவு சீக்கிரத்தில் லங்கைக்கு வந்து சேருவாரென்று கனவிலும் நினைக்கவில்லை. அவர் லங்கையில் வந்து சேர்ந்து கூடார மடித்ததைக் கேட்டு ஆச்சரியப்பட்டான். உடனே சத்துருவின் பலத்தையும் சைனியத்தையும் அறிவதற்காகத் தனது கோட்டையின் மதிளில் ஏறிக்கொண்டு பார்த்தான். ஸ்ரீராமரும் ராவணனுடைய நோக்கத்தையும் நடவடிக்கைகளையும் நன்குணர்ந்தார். ராஜாவின் அடையாளத்துடன் கோட்டையின் மதிளின்மேலிருக்கிற ராவணனை சுக்கிரீவன் கண்டு அதி கோபத்துடன் தாவி அவன் கிரீடத்தை ஓரடியால் கீழே தள்ளினான். பிறகு ராவணனும் சுக்கிரீவனும் யுத்தம் செய்தபொழுது ராவணன் தன்னுடைய மாயா சக்தியைக் காண்பிக்க வாரம்பித்தபொழுது சுக்கிரீவன் ராமரிருக்கும் கூடாரத்திற்கு வந்துவிட்டான். ராவணனும் தன் அரண்மனைக்குத் திரும்பிப் போனான்.


1911

# கும்பகர்ண வதம்.

வானரர்கள் லங்கையை வளைத்துக்கொண்டு எதிர்த்தார்கள். இராவணனும் தன் சைனியங்களை அவர்களுடன் போர் செய்வதற்கு அனுப்பினான். அந்த ராக்ஷஸ சேனையில் சிலரை வானரர்கள் தோற்கடித்தார்கள். இன்னுஞ் சிலரைக் கொன்றார்கள். அதைக் கண்ட பாக்கி சேனைகள் யுத்தகளத்திலிருந்து ஓடிப்போயின. அப்பொழுது இராவணன் தன் சகோதரனை கும்பகர்ணனை ஆழ்ந்த தூக்கத்திலிருந்து எழுப்பித் தனது கஷ்ட நிலையை அவனுடன் சொன்னான். கும்பகர்ணன் முதலில் ஸ்ரீராமருடைய மனைவியைத் திருடிக்கொண்டு வந்ததற்கு இராவணனைத் தூஷித்தான். ஆனால் பிறகு அவனுக்கு உதவி செய்யக் கும்பகர்ணன் சம்மதித்தான். உடனே தனது அபார பலத்துடன் வானர சைனியங்களை எதிர்த்து அவர்களைப் பயந்து ஓடும்படி செய்தான். கடைசியில் இராம லெக்ஷ்மணர்கள் தங்களுடைய பாணங்களால் அவனைக் கொன்றுவிட்டார்கள்.


BalaSaheb
1911

# இந்திரஜித்துடன் யுத்தம்.

கும்பகர்ணனுடைய விநாசத்தைக் கேட்டு இராவணன் சகிக்க முடியாத துக்கத்துடன் அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது அவன் புத்திரனான இந்திரஜித்து "நான் போய் இராமலெக்ஷ்மணர்களைக் கொல்லாமல் திரும்பி வருவதில்லை" என்று சபதங் கூறி பிதாவான இராவணனைச் சமாதானப்படுத்தினான். யுத்தத்திற்கு வந்த இந்திரஜித்துக்கு எதிராக லக்ஷ்மணனை யனுப்ப வேண்டுமென்று ஸ்ரீராமரிடம் விபீஷணன் சொன்னான். பிறகு இந்திரஜித்துக்கும் லக்ஷ்மணருக்கும், நடந்த யுத்தத்தில் லக்ஷ்மணன் இந்திரஜித்தினுடைய ரதத்திலுள்ள குதிரைகளையும் ஸாரதியையும் கொன்றுவிட்டதினால் இந்திரஜித்து கீழிருந்தே யுத்தஞ் செய்ய நேரிட்டது. இந்திரஜித்துக்கு பலக்குறைவு நேரிட்டதைக் கண்ட விபீஷணன் அவனைக் கொல்வதற்கு அதுதான் சமயமென்று லக்ஷ்மணனுக்கு அறிவித்தான். அப்பொழுது லக்ஷ்மணன் அதிகம் சக்தியுள்ளதும் தனக்கு ஸ்ரீராமனால் கொடுக்கப்பட்டதுமான ஒரு பாணத்தை எடுத்துத் தொடுத்து இந்திரஜித்தினுடைய சிரஸை இரண்டு துண்டாய் முறித்துவிட்டான்.


Balasaheb
1911

# இலக்ஷ்மணனை சக்தி என்ற ஆயுதத்தால் அடித்தல்.

இராவணன் தனது புத்திரனான இந்திரஜித்தினுடைய மரணத்தினால் அதிகம் சோகமும் கோபமும் உள்ளவனாய் அனேகம் சைனியங்களுடன் சத்துருவின் எதிரே வந்து லக்ஷ்மணன்மேல் சக்தி என்னும் ஆயுதத்தைப் பரம ரோஷத்துடன் பிரயோகித்தான். அந்த ஆயுதம் லக்ஷ்மணனுடைய மார்பைத் துளைத்து பூமியினுள் புகுந்தது. அப்பொழுது வானரர்களுக்கு மிகவும் வருத்தத்தையும் ஸ்ரீராமருக்குத் துக்கத்தையும் உண்டாக்க லக்ஷ்மணன் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்தான். ஆனால் ஸ்ரீராமர் தனது வியசனத்தை அடக்கிக்கொண்டு ராவணனுடன் நேரில் யுத்தம் செய்து யுத்தக்களத்தினின்று அவனைத் துரத்திவிட்டார். பிறகு வைத்தியத்தில் சமர்த்தனான ஸுஷேணன் என்கிற வானரன் லக்ஷ்மணனுடைய கை நாடியைப் பிடித்துப்பார்த்து "துரோணகிரி என்னும் மலையிலிருந்து யாராவது சஞ்சீவினி, விசல்யகரணி, சந்தானகரணி என்னும் மூன்று மூலிகைகளை சூர்யோதயத்திற்கு முன்னதாகக் கொண்டுவரும் பக்ஷத்தில் நான் இந்த லக்ஷ்மணனை உயிர்ப்பிக்கிறேன் என்று சொன்னான். அந்த துரோணகிரியானது அதிக தூரத்திலிருந்ததால் ஒருவரும் போகத் துணியவில்லை. அப்பொழுது ஜாம்பவான் "இந்தக் காரியம் நிறைவேற்றிக்கொண்டு வருவதற்கு ஹனுமான் ஒருவன் போனால்தான் முடியு" மென்று சொன்னான். உடனே ஸ்ரீராமருடைய உத்திரவைப் பெற்றுக்கொண்டு ஹனுமான் புறப்பட்டு அந்த மூலிகைகள் தனக்குத் தெரியாமலிருந்த போதிலும் அந்த மலையையே சூர்யோதயத்திற்கு முன்னதாக லெங்கைக்குக் கொண்டுவந்தான். அந்த மலையிலுள்ள விசேஷமான மூலிகைகளுடைய ஒளிகளைப் பார்த்து ஸ்ரீராமர் விடியற்காலத்திலுள்ள சூரியனுடைய காந்தியோ என்று நினைத்து மனது கலங்கினவராயினர். அப்பொழுது சுஷேணன் "இந்தக் காந்தியானது ஹனுமான் கொண்டுவந்த துரோணகிரி மலையிலுள்ள மூலிகைகளுடைய ஒளி, சூரியனுடைய காந்தியல்ல" என்று சொல்லி ஸ்ரீராமரைத் தெரியப்படுத்தினான். உடனே சுஷேணன் அந்த மலையிலிருந்து தனக்கு வேண்டியதான மூலிகைகளை எடுத்து அவைகளின் ரசத்தை லக்ஷ்மணன் வாயில் பிழிந்தபொழுது லக்ஷ்மணன் அங்கிருந்தவர்களெல்லாம் சந்தோஷ மடையும்படி எழுந்து முன்போல் யுத்தக்களத்தில் நின்றான்.



# இராவணனுடைய வதம்.

இலக்ஷ்மணன் உயிருடன் எழுந்துவிட்டானென்று கேட்ட இராவணன் மிகவுந் தாப மடைந்தான். உடனே அளவில்லாத சைனியங்களுடன் ஜயமோ மரணமோ தனக்கு உண்டாகட்டும் என்று நிச்சயம் செய்துகொண்டு புறப்பட்டு யுத்தஞ் செய்ய வந்தான். பிறகு ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தம் இன்னவித மென்று ஒருவராலும் வர்ணிக்க முடியாது. இராவணன் தனது அதிக பலத்துடனும் ஸாமர்த்தியத்துடனும் யுத்தஞ் செய்த போதிலும் அதிக வீரராயும் தீரராயு மிருக்கிற ஸ்ரீராமரால் தோல்வி யடைந்தான். முடிவில் அகஸ்திய முனிவரால் கொடுக்கப்பட்ட திவ்விய அஸ்திரத்தை எடுத்து ஸ்ரீராமர் அந்த யுத்தக்களத்தில் இராவணனை ஸம்காரஞ் செய்தார்.



BalaSahab
1911

# ஸீதாதேவி அக்கினியால் பரிசுத்தமாகுதல்.

பிறகு ஸ்ரீராமர் இலங்கா நகரத்திலுள்ள ராஜ சிங்காதனத்தில் லக்ஷ்மணனைக்கொண்டு விபீஷணனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து இவ்வளவு துன்பங்களை யாருக்குவேண்டி அனுபவிக்க நேரிட்டதோ அப்பேர்ப்பட்ட ஸீதாபிராட்டியாரைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஆக்ஞ்யாபித்தார். உடனே ஸீதாதேவி ஒரு பல்லக்கில் ஏற்றிக்கொண்டு வரப்பட ஸ்ரீராமரை நமஸ்கரித்தாள். அப்பொழுது ஸ்ரீராமர் ஸீதையைப் பார்த்து "நீ இராவணனால் திருடிக்கொண்டு வரப்பட்ட வளாகையால் உன்னை ரக்ஷிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை யான் செய்தேன். ஆனால் கொஞ்ச காலம் வேறொருவனுடைய வீட்டில் வாஸஞ் செய்ததினால் உன்னை மறுபடியும் மனைவியாக சுவீகரிக்க எனக் கிஷ்டமில்லை. ஆகையால் உனக்குப் பிரியமுள்ள இடத்திற்கு நீ போகலா" மென்று சொன்னார். இவ்விதமான ஸ்ரீராமருடைய வார்த்தை வச்சிராயுதம்போல் உருவி ஸீதாபிராட்டியாரின் மனதைப் பிளந்தது. அப்பொழுது ஸீதாதேவி கண்ணீர்பெருக விட்டுக்கொண்டு "நீர் வெகு அறிவுள்ளவராயிருந்தும் சாதாரணமான மனிதரைப்போல் பேசுகிறீர். என்னுடைய சுத்த மனதில் எப்பொழுதாவது கெட்ட எண்ண மிருந்ததானால் ஐந்து மகா பூதங்களும் என் சரீரத்தை இப்பொழுதே சாம்பலாய்ச் செய்யட்டும்" என்றும் "நீர் என்னைத் தள்ளிவிடத் தீர்மானித்தால் நா னிப்பொழுதே பிராணத்தியாகஞ் செய்துகொள்ளுகிறேன்" என்று ஸ்ரீராமரிடம் கூறித் தனக்கு ஒரு அக்கினி குண்டம் தயாராக்கும்படி லக்ஷ்மணனுடன் சொன்னாள். அதைப் பார்த்து லக்ஷ்மணன் சுக்கிரீவன் ஹனுமான் விபீஷணன் முதலானவர்க ளெல்லோரும் ஸ்ரீராமருடைய கோபத்தைச் சாந்தப்படுத்துவதற்கு பலவித சமாதானங்கள் சொல்லியும் அவைகளொன்றும் பயன்படவில்லை. அக்கினி குண்டம் தயாரான வுடன் ஸீதையானவள் ஸ்ரீராமரையும் அக்கினி பகவானையும் நமஸ்காரம் செய்து அவ்வக்கினி குண்டத்தில் விழுந்து விட்டாள். உடனே அக்கினி பகவான் ஸீதாதேவியுடன் வெளிக்கிளம்பி வந்து "ஸீதாதேவி மிகவும் பரிசுத்தமானவள். ஆகையால் இவளை அங்கீகரித்துக்கொள்ளும்" என்று ஸ்ரீராமரிடம் சொல்லி மறைந்து போயினார். அப்பொழுது அவ்விடத்திலிருந்த அனைவரும் அதிக சந்தோஷ மடைந்தார்கள்.


Balasaheb
1911

# புஷ்பகம் என்னும் ஆகாய விமானம்.

---

அயோத்தியா பட்டணத்திற்குப் புறப்படவேண்டிய சமயமானபொழுது விபீஷணன் ஸ்ரீராமரை புஷ்பகம் என்னும் தேவ விமானத்தில் ஏறிக்கொண்டு போகவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே ஸ்ரீராமருடைய இஷ்டப்படி ஸ்ரீராமர் ஸீதாதேவி லக்ஷ்மணன் விபீஷணன் ஹனுமான் சுக்கிரீவன் இன்னுஞ் சில பேர்களும் அவ்விமானத்திலேறி உட்கார்ந்துக்கொண்டு அயோத்தியை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் வரவைத் தெரிவித்ததற் பொருட்டு ஸ்ரீராமரால் ஹனுமார் முன்னதாகவே அனுப்பப் பட்டார். ஹனுமான் சொன்ன அந்த சமாச்சாரத்தைக் கேட்டு பரதன் மிகவுஞ் சந்தோஷத்துடன் சகோதரனான சத்துருக்கனனையும் புரோகிதரான வஸிஷ்ட முனிவரையும் இன்னும் அரண்மனையிலுள்ள ஜனங்களையும் அழைத்துக்கொண்டு ஸ்ரீராமரை எதிர் சென்றழைக்கச் சென்றான். புஷ்பக விமானம் கண்ணில் பட்டவுடன் அவர்கள் ஸ்ரீராமரை வந்தனஞ் செய்தார்கள். விமானம் கீழே இறங்கினவுடன் எல்லோரும் அதினின்று வெளிக் கிளம்பினார்கள். உடனே ஸ்ரீராமர் மாதாக்களையும் வசிஷ்ட முனிவரையும் வணங்கின பிறகு பரதனை ஆலிங்கனம் செய்துக்கொண்டார். அன்று முழுவதும் அவர்கள் எல்லோரும் பட்டணத்திற்கு வெளிப்புறமான நந்திக்கிராம உத்தியானத்திலிருந்துக்கொண்டு தண்டகா, கிஷ்கிந்தா, இலங்கா முதலான இடங்களில் நடந்த சரிதங்களைச் சொல்லிக்கொண்டு பொழுதைக் கழித்தார்கள்.


Balasaheb

# ஸ்ரீராமர் அயோத்தியா நகரம் பிரவேசித்தல்.

---

மறுநாள் எல்லோரும் மங்களஸ்னனஞ் செய்து உயர்ந்த சுத்தமான நல்ல வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டும் அனேகம் விலை யுயர்ந்த ஆபரணங்களை யணிந்துக்கொண்டும் அனேக வித வாத்தியக் கோஷத்துடனும் அயோத்திமா நகரை யடைந்தனர். அப்பொழுது ஸ்ரீராமர் ஸீதாபிராட்டியுடன் ஒரு திவ்வியமான ரதத்தில் உட்கார்ந்திருந்தார். அதில் பரதன் சாரதியா யிருந்துக் கொண்டு கடிவாளங்களைப் பிடித்துக்கொண்டி ருந்தான். சத்துருக்கனன் ஸ்ரீராமருக்குப் பட்டுக் கொடையைப் பிடித்துக்கொண்டு சென்றான். விபீஷணரும் லக்ஷ்மணரும் ஸ்ரீராமர் பக்கலில் வெண்சாமரங்கள் வீசிக்கொண்டு போனார்கள். அனேகம் வானரர்கள் மனிதர்களுடைய ஆடைகளுடன் யானைகளுடைய கழுத்தின்மேலும் முதுகின்மேலும் ஏறிச் சென்றார்கள். இந்த சமயம் முழுவதும் மங்களகரமான வாத்தியங்களும் நர்த்தனங்களும் ஸ்தோத்திரங்களும் முழங்கிக்கொண்டி ருந்தன. ஸ்ரீராமர் பதினான்கு வருஷம் வனவாஸஞ் செய்துவிட்டு இவ்விதம் ஆகோஷத்துடன் தனது பாரம் பரியமாய் அரசர்களாண்டு வந்த ராஜதானிக்குச் சென்றார். ஸ்ரீராமர் அரண்மனைக்கு வந்து சேர்ந்ததைப் பார்த்துப் பிரஜைகள் எல்லோரும் மிகவும் ஆனந்தத்தை அடைந்தார்கள்.


Balasaheb
1912

# ஸ்ரீராம பட்டாபிஷேகம்.

ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்திற்காக நான்கு ஸமுத்திரங்களிலிருந்தும் புண்ணிய தீர்த்தங்களைக் கொண்டுவருவதற்குத் தங்கக்குடங்களுடன் நான்கு வானரர்களை அனுப்பவேண்டுமென்று பரதன் சுக்கிரீவனுக்குச் சொன்னான். சூர்யோதயத்திற்கு முன் ஸ்ரீராமரும் ஸீதாதேவியும் மங்களஸ்னானஞ் செய்துவிட்டு மாதாக்களையும் வசிஷ்ட முனிவரையும் இஷ்ட தேவதைகளையும் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்து சிங்காதனத்தில் உட்கார்ந்தார்கள். அப்பொழுது அச்சபையிலுள்ள மகரிஷிகள் நான்கு ஸமுத்திரத்தி னின்றுங் கொண்டு வரப்பட்ட பரிசுத்தமான தீர்த்தங்களினால் ஸ்ரீராமரையும் ஸீதாதேவியையும் வாத்திய கோஷம் முழங்க அபிஷேகஞ் செய்தார்கள். அபிஷேகஞ் செய்தவுடன் வசிஷ்ட முனிவர் நவரத்தின மயமான கிரீடத்தை எடுத்து ஸ்ரீராமருடைய சிரஸில் வைத்தார். அச்சமயத்தில் ஜனங்க ளனைவரும் அதிக சந்தோஷத்துடன் ஜயகோஷங்கள் செய்தார்கள்.

பிறகு ஸ்ரீராமர் நிரம்பவும் விலையுயர்ந்த வெகுமதிகளைப் பிரதானமான வானரர்களுக்கும் ராக்ஷஸர்களுக்கும் சன்மானித்தார். ஸீதாதேவி ஹனுமானுடைய பக்தியையும் சௌகரியத்தையும் வணக்கத்தையும் புகழ்ந்து தன் கழுத்தி லணிந்திருந்த முத்து மாலையை அவனுக்குச் சன்மானித்தாள். இவ்விதம் ஸ்ரீராமர் அயோத்தியில் வெகு காலம் அரசாக்ஷி செய்து வர எல்லாப் பிரஜைகளும் சுகத்தையும் சந்தோஷத்தையு மடைந்தனர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!